உ
சிவமயம்





அருள்தரு சுந்தராம்பிகை உடனாய அருள்மிகு கச்சபேசர் ஆலயம், காஞ்சிபுரம்.

01.02.2024, வியாழன் குடமுழுக்கு நன்னீராட்டு விழா

கச்சபேஸ்வரர் பாமாலை

நூலாசிரியர் : கச்சி ஆளவந்த வள்ளலாராதீனம் க.முத்துகுமாரசாமி தேசிகர்

கச்சபேசப்படலம், இஷ்டசித்தீசப்படலம், (காஞ்சிபுரம் புராணம்)

(தண்டியலங்காரத்தில் கச்சாலை நாதரை போற்றும்
இருபாடல்கள் உள்ளடங்கிய தொகுப்பு)



நூல் வெளியீடு

அறுபத்து மூன்று நாயன்மார்கள் குருபூஜை விழாக்குழு

செல் : 9444012239



மண்டலாபிஷேக நிறைவு நாள் : 20.03.2024, புதன்கிழமை

இடம் : காஞ்சிபுரம்.

அருள்மிகு கச்சபேசரர் ஆலய






உ
சிவமயம்

கச்சபேஸ்வரர் பாமாலை

கச்சபேசப் படலம், இஷ்டசித்தீசப் படலம் (தண்டியலங்காரத்தின் கச்சாலைநாதரைப் போற்றும் இருபாடல்கள் உள்ளடங்கிய தொகுப்பு)

முதல் பதிப்புவெளியீடு :
நூல் வெளியீடு : தொண்டை மண்டல ஆதீனம், கயிலைப் புனிதர்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிய பரமாசாரிய சுவாமிகள்
ஸ்ரீமுக ஆண்டு - சித்திரை மாதம் 27ஆம் 10 - 5 - 93 திங்கள் அருள்மிகு கச்சபேசர் ஆலயம்
வெளியிடுவோர் : அறுபத்துமூவர் குருபூசை விழாக்குழு
எண்.69, காந்தி ரோடு, காஞ்சிபுரம்.





அருள்தரு அழகம்மை உடனாய அருள்மிகு கச்சபேசர் திருவருளால்

சாபம் நீங்கப்பெற்ற சனற்குமார்

மகாமேருமலையில் சதசிருங்கம் எனும் பகுதியில் அமைந்துள்ள பிரம்மதேவருக்குரிய பிரம்மநகரில், பல சிங்கங்கள் சூழ அமர்ந்திருக்கும் ஆண் சிங்கத்தை போல பிரம்மதேவரின் மகனான சனற்குமார முனிவர் பல முனிவர்கள் சூழ கம்பீரமாக அமர்ந்து சிவனை சிந்தையில் நிறுத்தி யோகம் செய்துகொண்டு அசைவற்றிருந்தார். அவ்வேளையில் இறைவன் இறைவியோடு வெள்ளை விடைமேல் ஏறி தேவ, நந்திகணங்கள் சூழ ஆகாயத்தில் உலா வரும் போது, சனற்குமார் முனிவர் எழுந்து நின்று அம்மையப்பரை வணங்கவில்லை. இருப்பினும் உண்மை நிலை உணர்ந்த சிவபொருமான் உமாதேவியாரை நோக்கி இவன் நம்மையே நிறுத்தி ஒருமித்திருக்கிறான் எனக்கூறி கயிலையை நோக்கிச்சென்றார். ஆயினும் நந்தியம்பெருமான் அசைவற்றிருந்த சனற்குமாரமுனிவர் சிவநிந்தனை செய்ததாகக் கருதி, **"ஒட்டகம் போல் இருந்ததனால் ஒட்டகமாகுக"** என சபித்தார்.

ஒட்டகமாக மாறிய சனற்குமார முனிவர் உலகமெல்லாம் அலைந்து திரிந்து தாம்முன் செய் நல்வினைகள் பயனால் கச்சியம்பதி அடைந்தார். அக்கால கட்டத்தில் கச்சபேசர் ஆலயம் அருகில் பிரம்மதேவன் தவம் செய்து கொண்டிருந்த இடம் அருகில் ஒட்டகம் வந்தது. பிரம்மதேவன் அந்த ஒட்டகத்தை உற்று நோக்க, அது தனது மகன் சனற்குமாரமுனிவன் என்பதையும் இந்நிலை ஏற்பட்டதற்கான காரணத்தையும் தனது யோகத்தினால் உணர்ந்து தனது மகனுக்கு சாபவிமோசனம் அருள இறைவனை

உருகி வேண்டினார். தவத்திற்கு இறங்கி பிரம்மா முன் தோன்றிய இறைவன் தம் அடியாரால் வந்தது நம்மால் நீங்காது ஆகையால் நந்தியே அதனை நீக்குவான் என அருளிச்சென்றார்.

மீண்டும் பிரம்மன் நந்திதேவரை நோக்கி தவம் புரிய நந்திதேவரும் பிரம்மன் முன் தோன்றி நான்கு முக கச்சபேசர் காட்சியளித்தமையால் அப்போதே உன் புதல்வரின் சாபம் நீங்கி விட்டது. இருப்பினும் உன் புதல்வன் மேருமலையை அடையும் போது ஒட்டக வடிவம் நீங்கப்பெறுவான். அதன் பிறகு எமக்கு மாணாக்கனும் ஆகி சிவதீட்ஷை பெற்று சிவஞானம் உணர்ந்து அருந்தவம் செய்வான் என அருளினார். பிரம்மதேவனும் தனது தேவ கணங்களை கொண்டு ஒட்டக வடிவில் இருந்த தன் மகனை மேருமலைக்கு அழைத்துச் சென்று சனற்குமாரமுனிவர் தன் சுய வடிவம் பெறச்செய்தார்.

பிரளய காலத்திலும் அழியாது, முருக்க மரத்தின் கீழிருந்து அருள் பாலிக்கும் அருள்மிகு கச்சபேசுவரர் ஆலயத்தில் இருந்து அருள்பாலிக்கும் சதுர்முகேசுவரர், யோகசித்தீசுவரர், தர்மசித்தீசுவரர், இட்டசித்தீசுவரர் ஆகிய சிவமூர்த்தங்களையும் வணங்கி வேண்டியதை வேண்டியாங்கு பெற வேண்டுகிறோம்.

குறிப்பு : ஒட்டகம், பிரம்மன் தவம் செய்யும் சிற்பம் கச்சபேசர் உற்சவர் மண்டபத்தில் மூன்றாவது தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

நகர செங்குந்த மகாஜன சங்க நிர்வாக்குழு :-

சிவத்திரு. **V.முத்துநாகலிங்கம்** சிறப்புத்தலைவர்
சிவத்திரு. **M.சிவகுரு** தலைவர்
சிவத்திரு. **D.ஆறுமுகம்** செயலாளர்

சிவத்திரு. **K.குமரவேல்** பொருளாளர்
சிவத்திரு. **A.கங்காதரன்** துணைத்தலைவர்
சிவத்திரு. **V.S.புண்ணியகோட்டி** துணைச்செயலாளர்

சிவத்திரு. **K.ரவிகாளத்தி** துணைத்தலைவர்
சிவத்திரு. **V.தாமோதரன்** துணைச்செயலாளர்

ஸ்ரீ கச்சபேசுவரர் திருக்கோயில் திருப்பணிக்குழு, காஞ்சிபுரம்.

சிவத்திரு. **S.பெருமாள்,** தலைவர்
சிவத்திரு. **K.சுப்பராயன்** செயலாளர்

சிவத்திரு. **M.சிற்றம்பலம்,** பொருளாளர்
சிவத்திரு. **V.ஜீவரத்தினம்,** சிவத்திரு. **D.ரவி** இணைச்செயலாளர்

சிவத்திரு. **V.K.தாமோதரன்,** துணைத்தலைவர்
சிவத்திரு. **M.உதயம் (எ) ராமலிங்கம்,** துணைத்தலைவர்
சிவத்திரு. **M.சாமிநாதன்** துணைச் செயலாளர்

சிவத்திரு. **C.சோமசுந்தரம்,** துணைச் செயலாளர்
சிவத்திரு. **D.வேலாயுதம்** துணைச் செயலாளர்

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் :-

சிவத்திரு. **கி.தேவராஜன்,** சிவத்திரு. **E.காளத்தி,** சிவத்திரு. **S.பாலு,** சிவத்திரு. **K.வீரராகவன்**
சிவத்திரு. **V.பழனிவேல்** சிவத்திரு. **S.வெங்கடேசன்,** சிவத்திரு. **S.வடிவேல்,** சிவத்திரு. **K.சுப்பிரமணி**
சிவத்திரு. **M.கந்தசாமி,** சிவத்திரு. **G.முருகேசன்,** சிவத்திரு. **S.ரவிக்குமார்**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

"இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"!

என்ற ஔவைப் பிராட்டியின் அமுதவாக்கின்படி, காஞ்சிபுரம், அருள்மிகு கச்சபேசர் திருக்கோயிலில் கடந்த 43 ஆண்டுகளாக அறுபத்து மூவர் மற்றும் தொகையடியார்களுக்கு அவரவர் திருநட்சத்திர நாட்களில் குருபூஜை நிகழ்த்திவரும் இக்குழுவின் சார்பில் கீழ்க்கண்ட தொண்டுகள் நடைபெறுவது யாவரும் அறிந்த தொன்றாகும்.

1. அருள்மிகு கச்சபேசர் சித்திரைப் பெருவிழாவின் 14 ஆம் நாள் மாலை 5 மணியளவில் அறுபத்து மூவர் மற்றும் தொகையடியார்களுக்கு ஒரே நேரத்தில் சிறப்பு அபிஷேகம் நடத்துதல்.
2. ஆண்டுதோறும் அருளாளர்கள் மாணிக்கவாசகர், மற்றும் சுந்தரர் குருபூசை ஒட்டிய ஞாயிறன்று திருவாசகம் மற்றும் 7ஆம் திருமுறையும் முற்றோதுதல் நடத்துதல்.
3. காஞ்சி அருள்மிகு கச்சபேசத்தில் 03-04-91 ஆம் ஆண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் கும்பாபிடேகம் நடந்து கச்சபேசபாமாலை நூல் வெளியிடப்பட்டது.
4. 2007ஆம் ஆண்டு 63 நாயன்மார்களின் வண்ணப்படம் 10000 அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது.
5. 2008ம் ஆண்டு திருவாசக முற்றோதுதலின் 25ஆம் ஆண்டுவிழாவில் முற்றோதுதல் செய்யும் 200 அடியார்களுக்குத் திருவாசக நூல் வழங்கப்பட்டது.
6. 2010ஆம் ஆண்டு 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்று நூல் "நல்வழிகாட்டும் நாயன்மார்கள் 5000 அச்சிட்டு வழங்கப்பட்டது. மேலும் அவர்களின் வாழ்வியல் சிறப்பை வண்ணப்படமாக அச்சிட்டு வழங்கப்பட்டது.
7. 2011ஆம் ஆண்டு தொடர்ந்து 48 நாட்கள் திருவாசக முற்றோதுதல் நிகழ்ச்சி நடத்தி அதில் தவறாது கலந்து கொண்ட 75 அடியார்களுக்கு திருவாசக நூல், கைத்தாளம், மற்றும் புத்தாடைகள் வழங்கப்பட்டது.
8. 2013ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக 63நாயன்மார்களின் குருபூஜை நாட்களை குறிக்கும் வகையில் புகைப்படம், நட்சத்திரம், ஊர், வரலாறு ஆகியவை உள்ளடக்கிய வண்ண மாத நாட்காட்டி வடிவமைத்து வெளியிடப்பட்டது.
9. 2015ஆம் ஆண்டு கயிலாயதரிசனம் செய்த 40 சிவனடியார்களுக்கு திருவடி பூசை செய்து "கயிலை மணி விருதும்" புத்தாடைகளும் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

10. 2023ஆம் ஆண்டு 63நாயன்மார்கள் வாழ்க்கை வரலாறு மற்றும் நம் குருபூசை விழா உபயதாரர்களின் புகைப்படங்கள் உள்ளடக்கிய நூல் வெளியிடப்பட்டு, நமது குருபூசை உபயதாரர்களுக்கு "சிவபுண்ணிய சீலர்" என்ற விருது வழங்கப்பட்டது.

11. அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு (01-02-2024) அன்று விழாவை தொடர்ந்து, மண்டலாபிஷேக நிறைவு நாளான 20-03-2024 அன்று கச்சபேஸ்வரர் பாமாலை நூல் (2ம் பதிப்பு) நூலாசியர் வழிவந்த சிவத்திரு S.**சரவண ஆறுமுகம்,** தலைமையாசிரியர் அவர்களின் உபயத்தில் அச்சிடப்பட்டு, சிவத்திரு. S.**நடராஜன்,** செயல் அலுவலர் அருள்மிகு கச்சபேசம், சிவத்திரு. K.V.**சுப்பிரமணிய குருக்கள்** கச்சபேசம் பூசை மிராசு, திருப்பணி **விழாக்குழுவினர்கள்.** காஞ்சிபுரம் **செங்குந்தர் மகாஜன சங்கத்தினர்** ஆகியோர் முன்னிலையில் வெளியிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது.

12. வானோரும் போற்றும் அருள்மிகு கச்சபேசரைப் போற்றும் கச்சபேசர் பாமாலையை ஏனோரும் ஓதி உய்ய வேண்டும் என்ற நன்னோக்கில் வெளியிடப்படும் இந்நன்னூல் வெளிவர பல்வகையிலும் உதவிய இக்குழுவின் அமைப்பாளர்களில் ஒருவரான திரு. **வெ.சிதம்பரம்** அவர்களுக்கும், முதல் பதிப்புக்கு முகவுரை வழங்கிய புலவர் திரு. **சிவ. சதாசிவம்** அவர்களுக்கும் நூலினை அழகுற அச்சிட்ட ஆர்.கே.பிரஸ் அச்சகத்தாரருக்கும் 2-ஆம் பதிப்பினை வெளியிட்ட சிவ.திரு.சரவணஆறுமுகம் தலைமை ஆசிரியர் மற்றும் பிழைதிருத்தம் செய்து உதவிய திரு.வ.குமாரவேல் அவர்களுக்கும் எங்கள் நெஞ்சாந்த நன்றியினை காணிக்கையாக்குகிறோம். எங்கள் செயல்கள் அனைத்தையும் உள்ளிருந்து உணர்த்தி உடன் இருந்து நடத்தும் அருள்மிகு கச்சபேசன் கருணையினையும் எண்ணி போற்றி பணிந்து எங்கள் நெஞ்சாந்த நன்றிகளை காணிக்கையாக்குகிறோம். கச்சபேச பாமாலை" பாராணயம் செய்து திருவளை பெற வேண்டுகிறோம்.

இவண்

அறுபத்து மூவர் குருபூசை

விழாக்குழுவினர்,

அருள்மிகு கச்சபேசம், காஞ்சி.

செல்: 9244552003 9444479800

9444012239

105 பி. கிருஷ்ணன் தெரு,

பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம்.

உ
சிவம்

அணிந்துரை

அருள்மிகு கச்சபேசத்தில் அருள்மிகு அழகம்மை (சுந்தராம்பிகை) உடனுறை கச்சபேசப் பெருமான் மீது மாதவச் சிவஞான யோகிகளின் தலை மாணவர்கள் பன்னிருவர்களில் ஒருவரான கச்சி ஆளவந்த வள்ளலார் ஆதினத்துக் கச்சிக் கச்சாலை தேசிகர் எனப்பெற்ற கச்சபேசுர தேசிகர் திருமகனாரான முத்துக்குமாரசாமி தேசிகர் யாத்த நூல் "ஸ்ரீ கச்சபேசர் மாலை" யாகும். கச்சிக்கச்சாலை தேசிகர் காஞ்சியின் பெருமைசாற்றிட காஞ்சிப் புராணம் யாத்த பெருமை உடையவர். (1937ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மாதவச் சிவஞான முனிவரின். "காஞ்சிப் புராணத்து" முகவுரை காண்க. முகவுரையாளர் சைவ சித்தாந்த பானு திரு. க.வச்சிரவேலு முதலியார், B.A.,L.T., மாதவச் சிவஞான யோகிகள் காஞ்சிப் புராணம் செய்திட அப்போது வழக்கிலிருந்த கச்சிக்கச்சாலை தேசிகர் யாத்த காஞ்சிப் புராணம் துணை நின்றது.

2. நூலாசிரியர் மாதவச் சிவஞான முனிவரின் தலைமாணவர் பன்னிருவரில் ஒருவர் என்பது மேலே கூறப்பட்டது. மற்ற பதினொருவர் பின்வருமாறு: 1. தணிகைக் கச்சியப்ப முனிவர்; 2. தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் ; 3. மதுரை ஆதீனம் வேலாயுத தேசிகர் ; 4. காஞ்சிபுரம் சரவணபத்தர் ; 5. காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் ; 6. இலக்கணம் சிதம்பரநாத முனிவர் ; 7. கடம்பர் கோயில் கலியாணசுந்தர உபாத்தியாயர்; 8. இராமநாதபுரம் சோமசுந்தர தேசிகர் ; 9. திருமுக்கூடல் சந்திரசேகர முதலியார் ; 10. காவாந்தண்டலம் அடைக்கலம் காத்தான் முதலியார் ; 11. அரும்பாக்கம் சிற்றம்பல தேசிகர் ஆகியோர்.

3. கச்சபேசுரன் என்பதன் மருவிய வழக்கே கச்சாலை ஆகும். கச்சபேசர் திருக்கோயில் காஞ்சிபுரத்துச் சிவகாஞ்சிப் பகுதியின் மையப் பகுதியில் அமைந்துள்ளதாகும். இது செங்குந்த மரபினர் நிர்வாகத்தில் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்து தற்போது அரசின் அறநிலையத் துறையின் ஆட்சிப் பொறுப்பிலுள்ளது. கச்சியாளவந்த வள்ளலார் ஆதீனத்து மரபினர் கச்சி ஏகம்பத்துக்கும், கச்சிக் கச்சபேசத்துக்கும் முப்போதும் திருப்பள்ளித் தாமமும், வில்வ மாலையும் சமர்ப்பிக்கும் சேவை செய்து வந்தார்கள். எனவே இவ்வாதீனத்தினர் தங்கிய இடத்துக்குத் "தழை கட்டி மடம்" எனப் பெயருண்டு. மேற்கூறிய மாதவச் சிவஞான யோகிகளின் மாணவர் பட்டியலைக் கூர்ந்து நோக்கினால் முனிவர், தேசிகர், உபாத்தியாயர், பத்தர் என்ற சிறப்புச் சுட்டுக்களைக் காண்கின்றோம். முனிவர் எனும் பெயர்

கொண்டோர் சமய விசேட தீக்கைகள் பெற்று சிவபூசாதுரந் தரர்களாய் ஒழுகியோர். பத்தர்களும் சமய விசேட தீக்கைகள் பெற்ற சமய ஒழுகலாறு விலகாது பத்திமை நெறி நின்றவர்கள் ; பெற்ற சமய ஒழுகலாறு விலகாது பத்திமை நெறி நின்றவர்கள் ; உபாத்தியாயர் என்போர் தாம் கற்ற கல்வியைப் பிறருக்கு ஈந்து மகிழ்வோர் ; அன்றியும் ஓதுவித்தலைத் தம் தொழிலாகக் கொண்டவர்கள். தேசிகர் என்போர் சமய, விசேட, நிர்வாண தீக்கைகளுடன் ஆசாரிய அதிகாரத்துக்குரிய ஆசாரிய அபிடேகம் பெற்றுப் பிற சீடர்களுக்குத் தீக்கை செய்து சமய நெறிகளில் ஒழுகுவிக்கும் உரிமை தரப்பெற்றவர்கள். எனவே தம் சீடர்களைச் சமயநெறியில் ஒழுகுவிக்கும் உரிமை கொண்டவரான முத்துக் குமாசாமி தேசிகர் தம் கடமையைச் செய்யும் துணையாகக் கச்சபேசர் மாலையை 100 செய்யுள்களில் யாத்துத் தந்தார்கள். பூமாலைகளுடன் பாமாலையும் யாத்து கச்சபேசருக்கு அணிந்தார்கள். கச்சபேசரிடம் தாம் பூண்ட பத்திமையின் சான்றாகத் தந்தையார் பெயராகிய கச்சபேசுரன் என்னும் திருநாமத்தையே தமது மகனுக்கு இட்டு தம் மரபு போற்றும் சீலத்தை விளக்கினார்கள்.

4. இந்நூல் 100 செய்யுட்களால் ஆனது. தம் ஆசிரியரால் செய்யப்பட்ட காஞ்சிப்புராணம். ஒரு சாலை மாணவர் கவிராட்சச கச்சியப்ப முனிவர் செய்த காஞ்சிப் புராணம் (இரண்டாம் காண்டம்) ஆகியவற்றில் திருவேகம்பமும் அதன் பெருமையும் விதந்தோதப் பெற்றமையால், கச்சபேசத்தின் பெருமையினை விதந்தோதி இம்மாலை செய்ய ஆசிரியர் முனைந்துள்ளார். கச்சபேசம் ஆமையுருக் கொண்டு பாற்கடல் கடையத் துணை நின்றமால் தன் தருக்கினால் பெருமானால் தண்டிக்கப்பட்டபின், கழிவிரக்கங்கொண்டு பெருமானின் திருஅருள் பெறுதற்கு, முருக்க மரத்தடியில் சிவலிங்கம் நிறுவி இலக்குமியுடன் வழிபட்டு பேறுபெற்ற இடம். இக்குறிப்பு இந்நூலின் அனைத்துப் பாடல்களிலும் குறிக்கப்படுகின்றது. எளிய நடையில் பெருமானின் பேரருள் நலனை அனைவர்க்கும் எடுத்துரைக்கும் பாடல்கள் பெருமான் தன்னடியார்கட்குப் பல்வேறு தலங்களில் அருள்செய்த நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன. ஆன்மகோடிகளுக்கு அருள் செய்ததற்காக இறைவன் கொள்ளும் பல்வேறு திருமேனிகள் ஓதுவோர் நினைவில் சித்திரமாக வரையப்பட பாமாலை பாடல்கள் உதவுகின்றன.

5. உலகம் அதன் நடைமுறையும் ஆன்மாக்களின் பாச ஞானத்தைப் படிப்படியாக வலிகுறையச் செய்து பதிஞானத்தை மேலோங்குவித்து, "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்" பொருட்டு அத்தன்கையாறும் நிலைகளாகும். இதனை பரமசிவம் தன் நவந்தரு பேதத்தின் மூலம் நடத்துவிக்கின்றது என்பது சைவசித்தாந்தத்துணிபாகும். அந்த நவந்தரு பேதத்தினும் வித்தியாதத்து வாதிபதியாம் ஸ்ரீகண்ட பரமசிவன் மிகு முக்கியமான இடத்தை வகிக்கிறார். ஸ்ரீ கண்ட பரமசிவரூபம் இப்பாமாலையில் பெரும் எண்ணிக்கையுள்ள பாடல்களால் ஓதுவோர் மனத்தில் நிலைநிறுத்தப்படுகின்றது. அடுத்து ஐம்முகங்கொண்ட மகேசுரத் திருமேனி விதந்தோப்படுகின்றது.

பிட்சாடனத்திருக்கோலம் ஐந்தொழிற் காரணமாம் நடனத் திருமேனி ; வடுகத்திருக்கோலம் ; விசுவரூபத் திருமேனி ஆகியவையும் ஓதுவார் மனத்தில் பதிக்கப்பெறுகின்றன. தொன்மைத் திருக்கோலம் (மாதொர் பாதியன்) சொல்லப் பெறுகின்றது.

6. ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகளின் பெருமையை மூன்று செய்யுள்கள் விதந்தோதுகின்றன. "மாதவஞ்செய், கவின் பெறுதவத்தினர் கனி சிவஞான முனிவர்" மெய்ஞ்ஞான போதர் என நூலாசிரியரால் சிவஞான யோகிகள் போற்றப் பெறுகின்றார். சிவஞான முனிவர் தோன்றியகுடி தமிழ் முனியாம் அகத்தியக் குருமுனி அருள் பெற்ற குடியாதலின் காஞ்சியில் அகத்தியர் சிவனருள் பெற்றதும் ஓதப்பெறுகின்றது. "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என மணிவாசகர் விதந்தோதிய கண்ணப்பர் பெருமை கூறப்படுகின்றது.

7. நூல் எழுந்தகாலம் 18-ஆம் நூற்றாண்டில் கடைப்பகுதி (கி.பி. 1775-1785) எனக்கொள்ளுதற்குரிய குறிப்புகள் நூலின் கடைப்பகுதியில் உள்ளன. "கனிசிவஞான முனிவர் வாழ் காஞ்சிக் கடவுளே," மெய்ஞ்ஞான போதர்வாழ் காஞ்சிக் கடவுளே எனப்பாமாலையின் 55, 56 ஆம் பாக்களில் கூறப்படுதல் இதனை உறுதி செய்கின்றது. நூலும் இந்நூலாசிரியரின் இளமையில் செய்யப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. இந்நூலாசிரியரின் காலமும் இதனுக்கு ஒத்து வருகின்றது.

கச்சிக்கச்சாலை தேசிகரின் முதுமைக் காலத்தே சிவஞான யோகிகள் காஞ்சியில் வசித்திருக்கின்றார்கள். சிவஞான யோகிகள் கி.பி. 1785-ஆம் அண்டில் திருவாவடுதுறையில் முத்தியடைந்தார்கள். எனவே அவர்கள் காஞ்சியில் வசித்தகாலம் கடைசியாக கி.பி. 1780 ஆக இருக்கலாம். அவர்கள் அருளாட்சி காஞ்சியில் நடத்திய காலத்தில்தான் நூலெழுந்தது என்பதை 55, 56 பாடல் வரிகள் உறுதி செய்கின்றன.

நூலாசிரியர் குடும்பத்தினரின் பரம்பரை பின்வருமாறு:

8. சச்சிதானந்த தேசிகர்-கச்சாலை தேசிகர்-முத்துக்குமாரசாமி தேசிகர், (நூலாசிரியர்) - கச்சபேசுர தேசிகர் ; சதாசிவ தேசிகர் - சிவசாமி தேசிகர் என்பதாகும். இவர்களில் எல்லோருக்கும் பிந்திய சிவசாமி தேசிகரின் காலம் கி.பி. 1896-1975 ஆகும். அடுத்து சதாசிவ தேசிகரின் காலம் கி.பி. 1854-1908. கச்சபேசுர தேசிகரின் காலம் 1800-1890. முத்துக்குமாரசாமி தேசிகர் காலம் கி.பி. 1760-1820 எனலாம். இவர்கள் பரம்பரைக் கேள்விமூலமும் காஞ்சித் திருவேகம்பத்தும் கச்சபேசத்தும் முப்பொழுதும் திருமேனி தீண்டும் பணி செய்த சிவாசாரியர்கள் மூலமும் மாதவச் சிவஞான யோகி கட்கு ஆகம நுணுக்கங்கள் தெளிவிக்கப்பெற்றன.

நூலாசிரியரின் பாட்டனார் சச்சிதானந்த தேசிகர் முதலாக இப்பரம்பரையில் இன்றுள்ளவர்கள் வரை வடமொழி தென்மொழி அறிவும் ஆகமங்களும் அறிந்தவர்கள் ; காஞ்சித் திருக்கோயில் சிவாச்சாரியர்களுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பதும் இதனை உறுதி செய்கின்றது.

வேதங்களையும் உபநிடத நுட்பங்களையும் திருவொற்றியூரில் வசித்த காலத்தில் ஓதி உணர்ந்தபின், சிவஞானமாபாடியம் எழுதி முடித்ததாயும் மரபு வரலாற்றுச் செய்திகள் உண்டு.

9. மழைபொழிய வேண்டும் என பாடல் 92ல் வேண்டியுள்ளது கி.பி. 1777-1780ல் நிலவிய கடும் வறட்சியை (தாது வருடப்பஞ்சம்) குறிப்பதாகும். இந்நூல் கி.பி. 1911ஆம் ஆண்டில், நூலாசிரியரின் உடன் மாணவராய் (மாதவச் சிவஞான யோகிகளின் தலை மாணவர்களில் ஒருவராய்த் திகழ்ந்த) காஞ்சி, ஆறுமுக முனிவர் தம் வழிவந்த பூசை. ஆ.கந்தசாமி முதலியார் அவர்களின் மாணவர், புலவர். திரு. செங்கல்வராய முதலியார் அவர்களால் கச்சாலை, திரு. முருகப்ப முதலியார் அவர்களின் பொருளுதவிகொண்டு அச்சேற்றப்பட்டது. அப்பதிப்புப் பிரதிகள் தற்போது கிடைத்தற்கு அரியன ஆயின.

10. பூசை. ஆ.கந்தசாமி முதலியார் வழிவந்த முதுபெரும்புலவர் (பூசை. ஆ.நமச்சிவாய முதலியார் அவர்கள் (1903-1989) தமிழ்ப்புரவலர். கி.ஆ.பெ. விசுவநாதனார் நிறுவிய தமிழகப் புலவர் குழுவில், முதுபெரும் மரபுப்புலவர்கள் எழுவர் குழுவில் மகாவித்வான் திரு. மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கட்கு அடுத்த நிலையில் அகவையான் முதிர்ந்த பெரும்புலவராக விளங்கியவர்கள் என்பது இங்கே குறிக்கத் தக்கது)

11. எனவே, பெருமுயற்சியின் மூலம் கிடைத்த ஒரே பிரதியினைக் கொண்டு இலக்கண மரபுப்படி அமைந்த பாக்களின் அடிகளை, ஓதுவோர்கள் பெருமுயற்சியின்றிப் பொருளுணரும் வகையில் சந்தி பிரித்தமைத்து இப்போது வெளியிடப்பெறுகின்றது. இவ்வாறு, ஓதுவோர் எளிதில் பொருளுணரும் வண்ணம் நூலமைப்புச் செய்தவர் நூலாசிரியர் பரம்பரையில் வந்துள்ள புலவர் திரு. சிவ.கணேசன், M.A.,B.Ed., அவர்களாகும்.

12. இந்நூலை வெளியிட்டு சிவத்தொண்டர்கள் பயன்பெற அயராதுழைத்தவர், சிவத்தொண்டிலும், சிவனடியார் திருத்தொண்டிலும் ஈடுபட்டுள்ள ஆசிரியர் V.சிதம்பரம் ஆவார். இவர்க்குஉறுதுணையாய் நின்றவர்கள். திரு. V.கேசவ முதலியார், திரு. T.கிஷ்டப்ப முதலியார் (ஜவுளி வியாபாரம்) ஆகியோராவர். இவர்களின் சிவத்தொண்டு போற்றுதற்குரியது. இவர்களும், இந்நூலின் வெளியீட்டுத் தொண்டில் பங்கு பெற்றோராம் அறுபத்து மூவர் குருபூசை விழாக் குழுவினரும் இந்நூலின் 101 ஆம் பாடலில் குறித்த அனைத்து நலன்களையும் அருள்மிகு கச்சபேசர் அருளப் பெறுவார்களாக.

இந்நூலினை ஓதுவோர் அனைவரையும் அருள்மிகு கச்சபேசரின் அருள் புரந்தருள்வதாக.

காஞ்சி சிவ.சதாசிவம், M.A.,M.Ed.,D.T.S.,D.S.M.

நூலகர், (வடமொழி மற்றும் சுவடிப்புலம்)

திருவாவடுதுறை ஆதீனம்.

காஞ்சிபுரம்
10-05-1993

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீ கச்சபேசுவரர் மாலை

காப்பு

கடல்விளிம்பு உடுத்த பார்மகள் இதய
கமலமாம் காஞ்சியம் பதியில்
திடம்பெற வாழும் அழகம்மை பாகம்
திகழ்கச்ச பேசர் தாள் இணையில்
வடம்புரை மாலைத் தொடைதொடுத்து அணிய
மகிழ்தரும் ஐங்கரப் புத்தேன்
கடமழை பொழியும் ஐஞ்சந்தி வேழக்
கணபதி இருசரண காப்பாம்.

நூல்

சீர்உறு கடுக்கை கூவிளம் படலை
திகழ்மதி அணிசடா மகுடப்
பூரணப் பொருளே ! புண்ணியத் தெளிவே
புங்கவர் எண்ணிலார் பணியும்
ஆரணத்து உறையே அழகம்மை பாக
அடியனை ஆண்டருள் புரிவாய்
காரணி பொழில்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே. 1

சரண பங்கயமும், புலியதள் உடையும்
தமனிய இனியமுந் நூலும்,
கிரண சூரியன் நூறாயிரம் கோடி
கிளர்திரு மேனியின் நீறும்
மருண மான் மழுவும் திருமுகப் பொலிவும்
அடியனேன் காணவந் தருள்வாய்
கருணைசேர் அடியார் பயில்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே ! 2

திருமரு மார்பன் ஏனமாய்க் கமலத்
திசைமுகன் அன்னமாய் இன்னும்
துருவியும் காணாப் பதமலர் செப்பத்
தூது சென்றனை நனி இரவில்,
வரும் பெரும் பவனி கண்டுகண் களிக்க
வாழ்வு தந்து அருளும் நாள் உளதோ!
கருமுகில் தவழும் மணிமதிற் காஞ்சிக்
கடவுளே! கச்சபா லயனே! 3

கொட்டுடைத் தோளும், சுமை அடை தாங்கும்
கூடையும் கொண்டுதென் மதுரை
பிட்டுவாணிபம் செய் செம்மனச் செல்வி
பேரருட்கு இரங்கி மண் சுமந்து
கொட்டுமுன் வைகை கட்டும் நின் பெருமை
கூறரிது எனைப்புரந் தருள்வாய்
கட்டுபொன் மதில் விண்மட்டு உயர்காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 4

மறைச்சிறு பாலன் அருச்சனைக்கு உகந்து
மறலியைப் படியினில் நெடுநாள்
கறைத் துளி வாயில் பிலிற்றிட உதைத்த
காலனே சூல பாணியனே!
இறைப் பொழுதேனும் நைந்து நைந்து உருகா
ஏழைபேற்கு அருளும்நாள் உளதோ
கறைத்துடி நெடுங்கைக் கயம் பயில் காஞ்சிக்
கடவுளே! கச்சபா லயனே! 5

தண்ணறாத் துளப மாலிகைப் புயம்மால்
சக்கரப் படைதனை வேண்டி
வண்ணவார் கமலம் ஆயிரம் எடுத்துன்
மலரடிக்கிட்டு ஒன்று குறையக்
கண் இடந்து அப்பி அர்ச்சனை புரியக்
கசிந்தருள் சங்கர எனை ஆள்
கண் நிறை கவினார் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 6

புலியதள் உடையும் நாக கங்கணமும்
புனிற்றிள மதியணி சடையும்
பலிகவர் பிரம கபாலமார் கரமும்,
பசுங்கொடி உமையவள் இடமும்
வலிகெழு கடின முயலகன் வெரிந்மேல்
வைத்திடு பதமும் எனக்கருள்வாய்
கலிகடல் உலகில் கயிலைநேர் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 7

அந்தரத் தனுவை அறலில் அற்புதத்தை
அணிமுகில் இடைவரும் மின்னலைச்
சுந்தர விழியின் இமைத்துணை அளவும்
தொடர்பிலா உடலை மெய்யெனவே
சந்ததம் அனந்த கற்பமும் இறவாத்
தனுவினை அறிவிலிக்கு அருள்வாய்
கந்தவேள் தவம்செய்திட அருள் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 8

அருள்திரு ஆரூர் ஆனைக்கா திருக்
காளத்தி அண்ணாமலை தில்லை
திருமுல்லை வாயில் மயிலை மாற்பேறு
திரு ஒற்றியூர் திருப்பாசூர்
வருதிரு ஆமூர் அச்சிறுபாக்கம்
மாகறல் இலம்பையம் கோட்டூர்
கருதரும் காஞ்சி பெரிதென வாழும்
கடவுளே கச்சபா லயனே! 9

மதுரை சீர்காழி குடந்தை ஐயாறு
மறைவனம் வாழ்கொளி புத்தூர்
சதிர்பெறு நாகை திருச்சிராப்பள்ளி
சக்கரப்பள்ளி மாகாளம்
துதிபெறும் விருத்தாசலம் கழுக்குன்றம்
தொண்டர்வாழ் கண்டியூர் கச்சூர்
கதிதரும் இவையில் சிறந்திடும் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 10

அடவியின் நாப்பன் ஐந்தழல் நடுவில்
ஐம்புலன் அடக்கி ஓம் என்னும்
திடம்பெறு மனுவை உச்சரித்து அறிவைச்
சிவத்தொடும் கலந்து மெய்ஞ்ஞான
நடன குஞ்சிதத் தாள்பணியும் மெய்யடியார்
நல்லடித் தொழும்பு தந்தருள்வாய்
கடகரிக் குழுக்கள் பயில்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 11

சலந்தரா சூரன் உடலிரு பிளவாய்த்
தானறுத்திடும் கொடும் கடின
வலந்தரு திகிரிப் படையினை வேண்டி
வாரிச மலர்கள் ஆயிரமும்
பலம்பெற அணியச் சக்கரம் கொடுத்த
பரமநீ எனைப் புரந்தருள்வாய்
கலைவலோர் பயிலும் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 12

கடல்வயிறு உளைந்து தரும்கொடு விடத்தைக்
களங்கரி உருவென ஆக்கும்
மிடறினில் அடக்கி மாலயன் முதலாம்
விண்ணவர் தமைஎலாம் காத்த
சுடர்மணிக்குன்றே மாசிலா மணியே
துகளறுத் தாண்டருள் புரிவாய்
கடகரி மறுகு சூழ் திருக்காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 13

மேருஓர் வில்லாய் வாசுகி நாணாய்
விண்டுவை அம்பெனப் படைத்துக்
கூரிய முறுவலால் புரம் ஒரு மூன்றைக்
கொளுவிய கருணை வாரிதியே
நாரியோர் பாகா சச்சிதானந்தா நாத
என்றனைப் புரந்தருள்வாய்
காரிருட் கூந்தல் மயில்பயில் காஞ்சிக்
கடவுளே கச்சபாலயனே! 14

சங்கினம் மருவும் இட்டசித் தீசத்
தடத்தினில் படிந்து மெய்ம்முழுதும்
துங்கவெண் ணீறு சாதனம் புனைந்து
தொட்டி நீறு உண்டபேர் தமக்கு
மங்குநோய் அனைத்தும் இரவிமுன் பனிபோல்
ஆக்குவை எனைப்புரந் தருள்வாய்
கங்கைமா நதிசூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபாலயனே! 15

பரிபுரப் பதமும் வீரகிண் கிணியும்
பாய்புலியதள் உடை இடையும்
அரவகங் கணமும் மான்மழுச் சூல
அபய மாவரத அம்புயமும்
எரிவிழி நுதலும் தவளவெண் நீறும்
ஏழையேன் காணவந்து அருள் புரிவாய்
கரியமால் தவம்செய்திட அருள் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 16

எண்ணில் பல்யோனி தொறும் தொறும்
செனித்தே இறந்திடும் பிணிதனைத் தவிரப்
புண்ணிய அடியார் அடியிணைத் தொழும்பு
புரியநீ கருணை செய்தருள்வாய்
தண்ணிலா முடிமேல் இந்தனம் சுமக்கும்
சதிரினை மறப்பனே அடியேன்!
கண்ணிலார் மணியே தவமருள் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 17

சங்குஅரி, நெடுநாள், கமடமாய்த், தவஞ்செய்,
காலையில் சூல பாணியனாய்த்
துங்கவெள் விடைமேல் அழகம்மை உடனே
தோன்றிவந்து அவன்உளம் அதனில்
இங்கிதம் பெறவே வேண்டிய வரங்கள்
இனிதருள் சிற்பர அருள்வாய் (சித்பர)
கங்கை வேணியனே காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 18

பஞ்சின்மெல் அடியும் வஞ்சிநுண் ணியைடையும்
பருவரை நிகர்முலைத் துணையும்
அஞ்சன விழியும் வண்டணி கரமும்,
மலர்மதி அனைய ஆனனமும்
கொஞ்சிய மொழியும் கொண்டுள முருகும்
கோதையர்க்கு ஆட்படா தருள்வாய்
கஞ்சன் மால் தவம்செய் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 19

அறுகினின் நுனியின் பனியது போல
அன்னைதன் உதரத்தில் உருவாய்
சிறைபட இருந்து மதியமோர் பத்தும்
சென்றபின் சேயதாய்ப் பிறந்து
மறுவிலாது இருந்து வனிதையர் மோகவாரியில்
படிந்திடாது அருள்புரிவாய்
கறைமதி அளவும் புரிசைசூழ் காஞ்சி
கடவுளே கச்சபா லயனே.! 20

முலையினை நெகிழ்த்துக் கலையவிழ்த்து உடுத்தி
முல்லைநேர் முறுவலைக் காட்டி
தலைமயிர் தன்னைக் கோதியே முடித்து
சன்னைகள் பலபல காட்டி
நிலைபெறும் தவத்தோர் உளந்தனை மருட்டும்
நெஞ்சினார் மயலொழித்து அருள்வாய்
கலைவலோர் பயிலும் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 21

அடவியின் இடத்தில் ஐந்தழல் நாப்பண்
ஐம்புலன் ஒருவழி நிறுவித்
திடம்பட மனத்தைச் சிவத்தொடும் கூட்டிச்
சின்மயானந்த மெய்வெளியில்
நடம்நவில் பாத தரிசனம் செய்ய
நாயினேன் தனக்கு அருள்புரிவாய்
கடமுலை மடவார் நடம்நவில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 22

விண்ணினில் உடுவில் அளவிலாச் சனனம்
மேதினி யிடத்தில் எடுத்துப்
பண்ணின்நேர் மொழியார் மோகவான் வேடப்
படுகுழி அதனிடை விழாமல்
தண்ணறு மலர்கொண்டு உனதடி பணியத்
தமியனை ஆண்டருள் புரிவாய்
கண்ணில் ஆயிரத்தோன் தவம்பயில் காஞ்சிக்
கடவுளே உச்சபா லயனே.! 23

திரிமருப் பெருமைப் பகட்டினில் ஏறிச்
செங்கையில் சூலம் ஒன்றேந்தி
புரிமுருக் குடைய பாசமும் கொண்டு
பொன்னென வருமனம் நினது
பெருமைசேர் விடைமேல் உமையுடன் வந்துன்
பேரருட், கருணை செய்திடுவாய்
கருவிமா முகில்கள் தவழ்மதில் காஞ்சிக் 24
கடவுளே கச்சபா லயனே.!

இக்குவில் வளைத்து மலர்க்கணை தொடுத்தே
எழில்தென்றல் தேரினில் ஏறி
மைக்குழல் மடவார் படையொடும் வந்தே
வன்பினால் அமர்செயும் மதனை
மிக்கவெம் பொடியாய் அடலைசெய் விழியாய்
வினைகளின் துரிசறுத் தருள்வாய்
கைக்கயம் மதியைத் தாவுசீர்க் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 25

வரையினில் குகையில் வதிந்திருந்து இனிய
வாயுவை அருந்தி ஐம்புலனைக்
கரை புரளாமல் அடக்கிமா தவம்செய்
கவின்பெறு தவத்தினர் தமக்கும்
உரைபெறக் கிடையாத் திருவடித் தொழும்பே
உதவி என்றனைப் புரந்தருள்வாய்
கரைபெறு கம்பா நதிபெறுங் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 26

செம்பொன் மால்வரையைச் சிலையெனப் பிடித்து
செங்கண்மால் அம்பெனப் படைத்தும்
உம்பரும் வியப்பக் கருதலார் புரத்தை
ஒளிதரு மூரலால் எரித்த
சம்புநின் பெருமை மறைகளும் எடுத்துச்
சாற்றரிது எனைப்புரந்து அருள்வாய்
கம்புலாம் வயல்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 27

சங்கரா சிவனே தாணுவே உமையாள்
தனதிடம் மன்னிய முதல்வா
மங்களா கரனே கங்கை வேணியனே
மாசிலாத் தனிப்பெரு மணியே
அங்கிவாழ் கரனே நீல கந்தரனே
ஆனனம் ஐந்து உடையவனே
கங்குலும் பகலும் முடிவறாக் காஞ்சிக்
கடவுளும் கச்சபா லயனே.! 28

மயிலைமா நகரில் குடத்திடும் என்பை
மாநிலத் தவர்கள்கண் களிப்ப
அயில்பொரு விழியும் மதிநிகர் முகமும்
அம்புயக் கரமும்சிற் நிடையும்,
வெயில்விடு முரலும் கொங்கையும் படைத்தோர்
மென்கொடி யென வரவளித்த
கயிலை நாயகனே காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 29

தாருகா வனத்தில் இருடிகள் மமதை
தன்னையே அடக்கிட அவர்கள்
பாரியர் கற்பபைப் பாலசங் கமராய்ப்
பலிக்கு வந்திடக் கலைவளையை
சோரவே செய்து கருணைசெய் தளித்த
சூழ்ச்சியை மறப்பனோ அடியேன்
காரிமா தவஞ்செய் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 30

மணிமுடி கனக் கோளகைக் கப்பால்
வயங்கிடும் வெளியெலாம் அளப்ப
பணிஅணி உபய பாதமலர் வயங்கு
பாதலம் ஏழினும் கடந்த
அணிபெறு ஞானத் திருவருட் பெருமை
யாவரால் உரைத்திட எளிதாய்
கணிபெறு பொழில்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே. 31

படைத்திடு மனையைப் பசுவினை மகவைப்
பாரினைப் பசியசெம் பொன்னை
நடைபெறும் பரியைக் கவுண்மத கரியை
நகைமணித் தொகை முதல் எவையும்
உடைத்தனம் என்று மதிப்பரோ மதியார்
உனதடித் தொழும் பையே நினைவார்!
கடகரித் திரள்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே. 32

விரிஞ்சை மாநகரின் மறைச்சிறு வனுக்காய்
வேதன்மால் தேடியுங் காணா
அரும்பெரும் சடில முடியினைச் சாய்த்தே
அர்ச்சனை செயஅருள் புரிந்தாய்
தெரிந்துனைப் பணியா அடியனேன் தனக்குன்
திருவடி பணியஎன் றருள்வாய்
கருங்கயல் விழியார் நடநவில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 33

ஒருபுலி உரித்தும் அம்புலி தரித்தும்
ஒருபுலிக்கினிய பாலளித்தும்
வரும்பெரும் புலியாய் இருந்தும் ஓர்மலைமான்
மலரடி வணங்கினை அதனால்
வரும்பசு அனைத்தும் பசுபதி என்றே
வழுத்திடும் வள்ளலென் றனையாள்
கரும்பிளம் கமுகு சூழ்வளக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 34

ஆணவத் தரியை மலஎச்சரக் கரியை
ஐம்புல வேடர்வாழ் வனத்தை
வீணுரை நாவைப் படைத்தசட் டகத்தை
வெறுத்துனைப்பணிய வாழ்வு அருள்வாய்
தாணுவே சிவனே இமயவெற் பரசி
தழுவிடக் குழைந்ததற் பரனே!
காணரும் பேறு தரும்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 35

சஞ்சலக் கடலின் மதிக்கலம் அழுந்தித்
தாபரிப் பொன்றும் இல்லாமல்
கொஞ்சம் மெல்லறிவாய் மயங்கிடு வோர்க்குன்
குரைகழல் அம்பிதந் தருள்வாய்
வஞ்சிநுண் இமையாள் இமயவெற் பரசன்
மகட்புணர் இனியகா தலனே,
கஞ்சமென் தடம்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 36

அலைகடல் துரும்புபோபல் பலபிணியுள்
அழுந்துநெஞ் சகத்திடை மெலிந்து
நிலைபெறாது அதனால் அறன்றிடு வேற்குன்
னெறிவரும் அடியர்பால் சேர்த்தே
அலைபெறா திருக்கச் சந்ததம் நினதுஇன்
அருள்நிறை கடைக்கண் நோக்கருள்வாய்
கலைவலார் கழகம் நிறைந்திடும் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 37

காழிமா நகரில் கவுணியச் சிறுவன்
கண்பிசைந் தழுதிட இரங்கி
மாழைசெய் வள்ளத்து இனியபால் அமுதை
வளர்தனத் திடையினில் கறந்து
தாழ்விலாது உதவி, அருந்திமுத் தமிழைச்
சாற்றிட அருளுமை பாகா
காழகிற் புகைகள் சூழ்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 38

நஞ்சினை முன்னம் விண்ணவர் நளின மாளிகை
உறுபிரான் ஆன
அஞ்சன வரைநேர் நெடியமால் முதலோர்
அழிவுறாது அருந்தியே காத்த
மிஞ்சிய கருணை வாரிதி எனது
வினைத்துரி சறுத்தருள் புரிவாய்
கஞ்சநன் மலரின் வாவிசூழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 39

சலந்தரா சூரன் உடலிரு பிளவாய்த்
தான் துணி சக்கரப் படையைச்
சலசலோ சனனுக்கு அளித்தமெய்ப் பொருளே!
தமியனுக்கு அருட்கண் நோக்கு அருள்வாய்
தொலைவில் பல்மறையும் ஆகமத் திரளும்
தோத்திரம் செய்யும் சிவக்கொழுந்தே
கலைவலார் துதிசெய் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 40

எறுழ்வலித் தடக்கை மும்மதக் களிற்றை
ஈர்ந்துரி போர்த்த சங்கரனே!
முறுவலால் புரம்மூன்று அடலைசெய்து எரித்த
முக்கணா முதிர்தவக் கொழுந்தே!
அறிவிலா எனது ஆணவச் சூரை
அடலைசெய்து அருட்கண் நோக்கு அருள்வாய்
கருவுகொள் வேழக் குழுநிறை காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே.! 41

வம்பினை முனிந்து புடைபரந்து இறுகி!
வாரிச முகையகப் படுத்தி
கும்பநீர் அமிழ்த்திக் கோங்கினை அலைத்துக்
குஞ்சரக் கொம்பினை ஒடித்துச்
செம்பொன் மால்வரையைச் சிவன்கையால் குனித்து
திருமுலை அழகம்மை இடம்வாழ்
கம்புலாம் வயல்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே.! 42

தந்தனை காழிப் பந்தனைச் சூரைத்
தடிந்தருள் கந்தனை அளித்த
சுந்தரி இமயத் துரையருள் புதல்வி
சுத்த வித்தையும் கடந்தப்பால்
சந்திர கோடி நிகர்முகம் படைத்த
தற்பரை பார்க்க என்றனைஆள்
கந்தடு களிற்றின் பந்திசூழ், காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 43

பதுமபொற் பதமும் வல்லிநுண் இடையில்
பட்டுடை கட்டிய எழிலும்
மதுமலர்க் கரத்தில் வைத்தசொற் கிளியும்
வரைதனை அனையபூண் முலையும்
விதிமதி நுதலும், அருள்நிறை விழியும்
விளங்குமின் பாகவந் தெனையாள்
கதுமென அடியார் கனந்தரு காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 44

பரவுசீர் அடியார் இதயமே கயிலைப்
பருப்பத மாகவீற் றிருக்கும்
சரணபங் கயனே தத்துவ நீத
சச்சிதா னந்தமெய்ச் சுடரே!
அரணம் மூன்றட்ட குறுநகைச் செவ்வாய்
அற்புதச் சிற்பர எனைஆள்
கருணைசேர் அடியார் பயில்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 45

சூக்கும தூல தேகமாய்ப் பிறந்து
சொற்பொருள் நயம்நிலை தெரிந்து
வாக்கினிற் கொடிய வாசகம் உரைத்து
மாயையில் படிந்து சஞ்சலமாய்
ஆக்கையாய்ச் சுமந்து விண்படா நினதுஏர்
அடியிணைக்கு அன்புதந் தருள்வாய்
காக்கும் நாயகியாள் தவஞ்செயும் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 46

கோலமால் முன்னம் கோலமாப் பிறந்துன்
குரைகழல் தேடியுங் காணாக்
காலிணை நோவச் சுவல்தலை மீதில்
கவின்வளை சுமந்துதென் கூடல்
ஆலவாய் தன்னில் விற்றனை அடியேன்
அவம்மதி அகற்றிஆண் டருள்புரிவாய்
காலமூன் றுணர்ந்தோர் பயில்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 47

முந்தநான் மறையும் ஆகமத் திரளும்
மொழிந்திடும் சாத்திரம் எவையும்
எந்தை என்னென்றே ஓலமிட் டலறி
இரங்கினும் காண்பரு முடிமேல்
இந்தனம் சுமந்தே ஆலவாய் வீதி
இடந்தொறும் விற்றனை ஆள்வாய்
கந்தனை தந்த தந்தையே காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 48

சடைமுடி மறைத்து முடியினைத் தரித்தும்
தமனிய மணிபல அணிந்தும்
குடைநிழல் இருந்தும் தனியர சியற்றிக்
குறுநரி பரியதாய்ச் செய்த
நடன குஞ்சிதனே சிவாகமத் தெளிவே
நாயினேன் தனைப்புரிந்து அருள்வாய்
கடமுனி தவம்செய் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 49

அருவாய், உருவாய், அருஉருவாகி
அகண்ட பூரண ஒளியாகி
சுருதி ஆறங்கம் ஆகமம் எவையும்
சொல்லுதற் கரியதற் பரமாய்
ஒருபெரு முதலாய் விளங்கிய நினையான்
உவப்புறத் துதிக்கும் வாழ்வு அருள்வாய்
கருணை வாரிதியே காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 50

அங்கைமான் மழுவும் நெற்றியம் பகமும்
அரவகங் கணங்களும் மறைத்தோர்
செங்கையிற் குடையும் சரித்த கோவணமும்
திருநுதல் பூதி சாதனமும்
தங்கஓர் விருத்த பாலநற் குழவி
தன்வடி வெடுத்தனை புரந்தருள்
கங்குலும் பகலும், முழவறாக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 51

ஆலின் கீழிருந்து நால்வர்க்கு முன்னாள்
அரும்பொருள் உரைத்த சங்கரனே!
சீலசற்குருவே கருணைவா ரிதியே
சின்மயானந்த மெய்ச்சுடரே
வேலுறழ் விழியாள் பாகனே அடியேன்
வினைத்துரி சறுத்தருள் புரிவாய்
காலனைக் காய்ந்த காலனே காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 52

மருவளர் குருந்தின் அடியினில் இருந்து
மாணிக்க வாசகர் தமக்கு
விரிந்த அஞ்செழுத்தின் வண்மையை உரைத்த
வித்தக சித்தசற் குருவே
அருந்தவ முனிவர் அமரர் விஞ்ஞையர்கள்
அடிபணி, பவளனை ஆள்வாய்
கருந்தடம் கண்ணார் நடநவில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 53

படியெலாம் அளந்த நெடிய பாலவனாம்
பாய்விடை மீதினில் ஏறி
கொடியிடை உமையாள் உடன்வருபவனி
கொடியனேன் காணவந் தருள்வாய்
செடிவிடும் தவள வெள்ளியங் கிரிவாழ்
சின்மயா னந்தமெய்ச் சுடரே
கடிமணம் நிலவும் வீதிசூழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 54

தனிவழித் துணையே ஒப்பிலா மணியே
சச்சிதானந்த மெய்ச் சுடரே
பனிவரை அளித்த பெண்கொடி படரும்
பண்பினால் துதிபெறும் தருவே
இனியமா தவர்கள் உளத்தினில் விளங்கும்
எண்ணிலாக் கருணை வாரிதியே
கனிசிவ ஞான முனிவர் வாழ்காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 55

அரவகல் அல்குல் ஆரிவைய ரிடத்தில்
அன்பினை நீத்தவர் தமக்குப்
பரகதி கொடுக்கும் பரன்என உன்னைப்
பன்மறை உரைத்திடும் நீயும்
இரவினில் திருவா ரூரினில் பரவை
இடத்தினில் தூதுசென் றனையாள்
கரவில்மெய்ஞ் ஞான போதர் வாழ்காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 56

நாட்டினில் குயவன் திகிரிபோல் உலகில்
நண்பிலார் இடத்தில் சென்று
பாட்டினை உரைத்து முப்பத் திரண்டு
பல்லினை வெள்ளெனக் காட்டி
தாட்டிகன் என்றே உரைப்பினும் ஈயார்
தமதிடத் தணுகிடா தருள்வாய்
காட்டரும் பேற்றை அருள்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 57

சங்குஅரி இனிய சங்கரா என்று
தன்உரு ஏனமாய் எடுத்து
பங்கயப் பதத்தைத் தேடியும் காணாப்
பரமநீ அடியவர் தமக்குச்
செங்கை ஆமலகக் கனியென நிறைந்த
திருவுருக் காட்டும் அற்புதனே!
கங்கை காளிந்தி தவம்செயும் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 58

உவரிநீர் அனைத்தும் அங்கையிற் சிறிய
உளுந்தள வாகவே கொண்ட
தவத்துயர் குறிய முனிவனுக் காக
சங்கரி உடன்விடை மீதில்
பவத்துரிசு அகற்றித் திருமணக் கோலம்
பரிந்துகாட் டினைஎனைப் புரந்தாள்
கவுத்துவ நிறந்தோன் தவம்புரி காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 59

புலிபதத் தினிய ஒருபெரு முனிவன்
புதல்வனாம் உபமன் னியற்கு
நலிபசி அகலப் பாலவா ரிதியை
நல்கினை அறிவிலேன் தனக்கு
மெலிபவப் பசிநோய் அகற்றி உன்பாத
வீடுறத் திருக்கண்நோக் கருள்வாய்
கலிபிணி அகற்றும் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 60

பொருப்புவில் எடுத்துப் புரமொரு மூன்றும்
பொடிபட நகைத்தனை எழிலார்
கருப்புவில் மதனை நுதல்விழி அதனால்
கனல்கொளச் செய்தனை எருமைப்
பொருப்பிலாம் நமனை உதைத்தனை எனையும்
புரந்தருள் செய்யும்நாள் உளதோ
கருப்பமாய் உலகைப் படைத்தருள் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 61

முயலகன் முதுகில் ஒருபதம் ஊன்றி
முத்தலைச் சூலம்ஒன்று ஏந்தி
வயவலி உழுவை அதனினை உடுத்து
மழுமறி அங்கையில் ஏந்தி
செயவிழி உமையாள் கண்டுகண் களிக்கத்
திருநடம் புரிந்தனை எனையாள்
கயலினம் உகளும் வாவிசூழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 62

நவமணித் திரளும் செம்பொனும் அகிலும்
நரந்தமும் நறுமலர்க் குவையும்
புவியினிற் றரங்கக் கரங்களால் கொணர்ந்து
பூசைசெய் தொண்டரை மானச்
சிவனுறை புனிதச் சினகரம் தோறும்
திப்பிய பூசைசெய் பாலிக்
கவனவான் நதிசூர் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 63

பண்டொரு வேடன் வாயின்நீர் ஆட்டிப்
பறிதழை முடியினில் சூட்டித்
திண்பல சுவையும் கண்டநல் இறைச்சி
தேக்கிலை கல்லையில் படைத்தே
அன்டர் நாயகனே என்றுரைத் தூட்ட
அமுதுசெய் தனைஎனைப் புரப்பாய்
கண்டபேர்க் கிட்ட வாழ்வருள் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 64

சராசரம் அனைத்தும் அளித்த காமாட்சி
தவஞ்செயக் கம்பையாறு அதனை
பராரை நீண்மரங்கள் வெற்பெலாம் களைந்து
பகலில்மேல் இகலியது ஏய்ப்பச்
சுராசுரர் நடுங்க வரஉமை தழுவு
தொண்டு கொண்டனை எனையாள்
சராசலக் குழுக்கள் நிறைந்திடும் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 65

மின்னின்நேர் இடையும், அன்னமென் நடையும்,
விளங்கிய மயிலினற் சாயல்
பொன்னனை யாள்தன் அன்பினுக் கிரங்கி
புண்ணிய சித்தராய் வந்தே
மன்னிய லோகம் பொன்னதாய்ச் செய்துன்
வடிவு கண்டனை எனைப் புரந்தாள்
கன்னிமா மதில்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 66

உடுத்துளி அதனை மழைத்துளி நிரையை
உவரியில் எழுந்திடும் மலையை
கடற்கரை மணலைத் தொகுப்பினும் அடியேன்
காசினி யிடத்தினில் மெலிவாய்
எடுத்திடுச் சனனம் இத்தனை என்றே
எண்ணிலா இனியெனைப் புரந்தருள்வாய்
கடுத்தசொல் அறியாக் குணத்தர்வாழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 67

நரியெனும் பொதிசோறு, அதனையே சுமந்து
நமதெனச் சந்ததம் மயங்கி
பரிவுகொண்டு அவமே நான்தனைக் கழித்த
பரிவிலேற்கு அருள் நனிபுரிவாய்
கரியுரி போர்த்தே அரவரைக்கு அசைத்துக்
காளிமுன் நடித்தனை எனையாள்
கரியவன் தவஞ்செய் பெரும்புகழ்க் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 68

முல்லை மல்லிகை மந்தாரை கோங்குகிறகு
முடித்த செஞ்சடை மிசை ஒருத்தன்
கல்லலர் சாத்த உவந்தனை என்றன்
கலித்தொடை மாலையும் அணிந்தாள்
வில்லின்நேர் நுதலாள் உடன்மழ விடைமேல்
விளங்கிய அருட்பெருஞ் சுடரே
கல்லென வேத ஒலிநிறை காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 69

அருள்நிறை கூடல் வழுதிதன் மகளாய்
அவரித் தரசுசெய்து துலகில்
வருநிறை முழுதும் தனதுசெங்கோலின்
வழிமுறை நிறுவி ஈசானப்
பெருந்திசை அடுத்துத் திருமணம் முடித்த
பெண் இடப்பாக என்றனை ஆள்
கருணைசேர் அடியார் பயில்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 70

புவிவலம் செய்யேன் புனிதநீர் படியேன்
புண்ணிய நாமமும் உச்சரியேன்
சிவனடியார்கட் கேவல்கள் செய்யேன்
சிவகதை செவியினில் வினவேன்
பவமிகப் புரியும் பண்பினேன் தனக்குன்
பணிசெய இனிதருள் புரிவாய்
கவனவாம் புரவி தேர்நிறை காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 71

கஞ்சனார் சிரத்தை உகிரினால் அரிந்தாய்
காமனைக் கனல்விழி அதனால்
துஞ்சவே எரித்தாய் புரம்ஒரு மூன்றும்
தூயபுன் மூரலால் முடித்தாய்
வஞ்சனேன் தனது பவக்கொடுங் காட்டை
வாட்டியாட் கொண்டருள் புரிவாய்
கஞ்ச வாவிகன்சூர் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 72

விருச்சிக மதியில் இரவிதன் வாரம்
விடியுமுன் எழுந்து துல்லியமாய்
அருத்தியோடு இனிய இட்டசித்தீச
அறல்தனிப் படிந்து சங்கரனைத்
திருத்தமாய்ப் பணிந்து மெய்வலம் வந்து
தெரிசித்தோர்க்கு இனியவை அளிக்கும்
கருத்தனே ஞான அழகம்மை இடம்வாழ்
கடவுளே கச்சபா லயனே! 73

அழிவிலாப் பொருளே தனிச்சிவக் கொழுந்தே
அன்பினர் அன்பில் பழுத்த
கொழுமதுக் கனியே கோதிலாக் கரும்பே
குறைவிலா நிறைந்தவார் அமுதே
தழுதழுத் துருகா அறிவிலேன் தனைஉன்
தாள்துணைத் தொழும்புறப் பணிப்பாய்
கழிபெருந் தவத்தோர் தவம்புரிக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 74

தந்தையும் இன்றித் தாயரும் இன்றித்
தனயர்மற் றொருவரும் இன்றிச்
வந்தியாம் அந்தச் செம்மனச் செல்வி
வாயிலில் கூலியாள் ஆகி
முந்தவந் தணையும் பெருமையின் சிறப்பை
மொழிவதற்கு அரிதுஎனைப் புரப்பாய்
கந்தமைந் தடக்கும் தவத்தர்வாழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 75

அடிமுடி நடுவும் அந்தமும் இல்லா
ஆதியே வேத நாயகனே
துடியிடை உமையாள் பாகனே ஞானச்
சோதியே ஞான தத்பரனே
வடுவகிர் அனைய கண்ணியர் மோக
வாரியிற் படிந்திடாது எனையாள்
கடிமணம் ஓங்கும் காஞ்சியம்பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 76

மலையெடுத் தவனும் வாரிசத் தவனும்
மற்றுள தேவரும் எவரும்
அலையெடுத் தெறியும் பால, வாரி திமுன்
அகடுளைந் தீன்றவன் நஞ்சை
நிலைபெற அயின்ற கருணை வாரிதியே
நெறிலேன் தனையும் ஆண்டருள் வாய்
கலைபயில் புலவர் தவம்பயில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 77

ஆயிரம் கோடி பானுவோர் காலை
அவதரித் தாலென விளங்கும்
தூயமால் விடைமேல் வரும்பெரும் பவனி
சுருதியும் புகலுதற்கு அரிதாம்
நாயினும் கடையாம் சிறியனை உனது
நாமம் உச்சரித் திடஅருள்வாய்
காய்கதிர் அனைய மணிமதிற் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 78

வண்டிருந்து அரற்றும் கொன்றை மாலிகையும்
வனதமோர் ஐந்தும் மான்மழுவும்,
கெண்டையங் கண்ணி உமையுடன் விடைமேல்
கேசவன் சதுர்முகப் பிரமன்
அண்டரும் பணிய வரும்பெரும் பவனி
அடியனேன் காணவந் தருள்வாய்
கண்டுநேர் மொழியார் நடம்நவில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 79

தும்பை மாலிகையும் செஞ்சடா அடவியும்
துலங்குவெண் ணீறு வெண்தலையும்
அம்பிகை பாகத் துடன்மழ விடைமேல்
அனுதினம் வரும்பெரும் பவனி
நம்பிமுப் போதும் தரிசனம் செய்ய
நாயினேற்கு அருளும்நாள் உளதோ
கம்பைமா நதிசூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 80

ஐம்புல வேடர் செய்திடும் குறும்பின்
அகப்படாது உளம் ஒருமித்துச்
சம்புவே சிவனே தாணுவே நெடுமால்
சதுர்முகன் தேடியுங் காணா
அம்பிகை பாக சச்சிதானந்த அண்ணலே
எனைப்புரந் தருள் வாய்
கம்புலாம் வயல்சூழ் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 81

சுவர்த்தலை உழலும் பூசைபோல் யோனி
தொறுந்தொறும் ஆசைவைத் துழலும்
பவத்துவக் குடைய கொடியனேன் தனக்குன்
பணிவிடை செயஅருள் புரிவாய்
நவத்தொகைப் பேத வடிவுகொண்டருளும்
நற்றவக் கருணை வாரிதியே
கவுத்துவா பரணன் தவம்புரி காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 82

மண்முதலாய பூதமோர் ஐந்தும்
மதியுடன் இனன் இயமானன்
எண்முதலாய அட்டமூர்த் தமுமாய்
எள்ளுறும் எண்ணெய்போல் எங்கும்
பண்புற, நிறைந்த, சின்மயானந்த
பரமனே எனைப்புரந் தருள்வாய்
கண்ணி நற்றவர்கள் தவஞ்செயும் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 83

மதுத்துளி பிலிற்றும் மலர்ப்பொழில் உடுத்த
மதுரையம் பதியினில் வைகை
நதியினில் விடுத்த ஏடெதிர்ந் திடவும்
நண்பிலாச் சமண்கழு வேறும்
விதியிலா தவர்க்கே அருள்சுறந் திடவும்
வேண்டினை எனைப்புரந் தருள்வாய்
கதிரவன் இரதம் தவழ்பொழிற் காஞ்சிக் 84
கடவுளே கச்சபா லயனே!

கிளிமொழி மடவார் இடத்தினில் வைத்த
கேடிலா மோக வாரிதியில்
துளித்துணை உனது துணையடி அதனில்
தோய்ந்திடில் வைத்திடில் அவற்கே
அளியினம் மூசும் கற்பக நாட்டில்
அரசருள் கருணை வாரிதியே
களிமத வேழப் பந்திசூழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 85

எள்ளினில் எண்ணெய் எனஉல கிடத்தில்
ஈறிலா உயிர்த்தொகை தோறும்
உள்ளிலும் புறமும் நிறைந்தவைக் கெல்லாம்
ஊழ்வழி யாவையும் அளிக்கும்
வள்ளலென்று அறிந்தும், வழுத்திட அறியா
வறியனை ஆண்டருள் புரிவாய்
கள்ளுலாம் கமல மலர்வயற் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 86

சூதுநேர் முலையார் சூதினும் ஆழ்ந்த
சூழலில் வீழ்ந்து உனதடியில்
தாதறு மலர்க்கொண்டு ஒருபொழு தேனும்
தானருச்சனை புரிந்தரியேன்
பூதலம் அதனில் திரிகளே பரம்ஆம்
பொறியிலிக்கு அருட்கண் நோக்கு அருள்வாய்
காதுவேற் கண்ணார் நடம்நவில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 87

ஆழிசூழ் உலகம் முழுதுமோர் குடைக்கீழ்
அரசுசெய் வாழ்வுவந் திடினும்
பீழைசெய் நரகக் குழியில் வீழ்ந்தாழப்
பெறினும்நின் அடித்தொழும் பியற்றும்
வாழ்வையே கருதி வாழ்வினைப் பெறுவர்
வன்மனுக்கு அருட்கண் நோக்கருள் வாய்
காழகில் கமுகுசூழ் திருக்காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 88

விரித்தசெஞ் சடையும் நுதல்விழிக் கனலும்
வெண்தலை மாலை கோங்கிறகும்
சிரித்தபுன் மூரலும் தவளமுந் நூலும்
செங்கையில் தங்குமான் மழுவும்
அருத்தியோடு உன்னை உளத்தினில் நினைந்தே
அர்ச்சனை புரியும்வாழ் வருள்வாய்
கருத்தினில் நினைத்த வரமருள் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 89

வனப்பினில் மாரன் கொடையினில் கர்ணன்
வயதினில் இனிய மார்க்கண்டன்
தனத்தினில் தனதன் கல்வியில் சேடன்
தயவினில் மனுகுல ராமன்
சினத்தினைத் துமிந்த தருமன் என்றுஈயாச்
சிதடர்பால் கவிசொலாது அருள்வாய்
கனத்தினைப் படைத்த புரிசைசூழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 90

மணலையும் திரிப்பார் கனலிடை நடப்பார்
மலையைஓர் கையினில் எடுப்பார்
பணஅரவு அதனை ஆட்டுவார் விடத்தைப்
பருகுவார் சினப்புலி தடுப்பார்
மணமலி மலர்கொண்டு உனதடி பணியா
அறிவிலார் நட்பொழித்து எனையாள்
கணமுரசதிரும் மறுகுசூழ் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 91

விழைவுறு கழையைப் பாகினைத் தேனை
மிளிர்தரு அமுதை முக்கனியைக்
குழலினை யாழைப் பழித்திடும் இனிய
கோதிலாத் தீஞ்சுவை மொழியார்
அழகம்மை பாகா மழைமிகப் பொழிய
அருள்சுரந்து உனதருள் புரிவாய்
கழைகமுகனைய வயல்நிறை காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 92

அழிவிலாப் பொருளே பழமறைக் கொழுந்தே
ஆகமம் நிறைந்த ஆழ்கடலே
ஒழிவிலாது உதவும் இனிய கற்பகமே
உயிர்தரும் அமுத சஞ்சீவி
விழியிலார் மணியே அழகம்மை இடம்வாழ்
விமலனே அமலை நாயகனே
கழிபெருஞ் செல்வந் தருந்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 93

சண்டமா ருதத்தின் இடைப்படும் அணுப்போல்
சஞ்சலச் சூழலில் தொடக்குண்டு
அண்டஓர் இடமும் இன்றியே திரியும்
அறிவிலேற்கு ஆதரம் அருள்வாய்
பண்டைஓர் சிறுவற்கு ஆய்முடி சாய்த்த
பரமனே கைலை நாயகனே
கண்டுநேர் மொழியார் நடநவில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 94

ஈனரே எனினும் அடியவர் தமக்கே
இணக்கம்ஒன் றறிந்திலர் எனினும்
பானலம் விழியார் மோகவான் வேடப்
படுகுழி விழுபவர் எனினும்
ஞானநாயக என்றுரைத் திடும்அவர்க்கே
நன்மைசேர் வீடருள் பவனே
கான யாழினர்கள் இசைபயில் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 95

சந்தனத் தேய்வை குங்குமம் இளநீர்
தயிலம்நெய் பால்தயிர் தோயம்
மந்திர விதியால் ஆட்டி முப்போதும்
மலரொடு பூசனை செய்தே
இந்து சேகரனே பிறவிவேர் அறுக்கும்
இறைவன் என்று ஓதவாழ்வு அருள்வாய்
கந்தம் ஐந்தடக்கிக் தவம்புரி காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 96

பஞ்ச பாதகங்கள் செய்தபேர் எனினும்
பத்திமெய் வைத்திலர் கடின
நெஞ்சினர் எனினும் பூதி சாதனத்தை
நினைந்திடா வஞ்சகர் எனினும்
அஞ்சலித் துன்றன் அடிமலர் பணிவார்க்கு
அமர் உலகளிப்பை என்றனையாள்
கஞ்சன் மால்தவஞ்செய் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 97

புனிதநீர் படியேன் நறுமலர் கொய்துன்
பொன்னடி தன்னிலே பணியேன்
தனிஇருந்து உனது சரிதைநான் உரையேன்
சான்றவர் இணக்கமும் அறியேன்
வனிதையர் மோக வாரியிற் படிந்து
மயங்கும் என்றனைப் புரந்தருள் வாய்
கனிதரு சோலை சூழ்திருக் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 98

மட்டுறு மலர்கொண்டு உனதடி இணையில்
வாஞ்ஞையுற்று அர்ச்சனை புரியும்
சிட்டர்கள் பணியே பணியெனப் பணிய
திருவருட் கருணைசெய் திடுவாய்
அட்டமூர்த்தமுமாய் எங்ஙணும் நிறைந்த
அற்புத ஆநந்த மெய்ப் பொருளே
கட்டளைப் படியே தவந்தரும் காஞ்சிக்
கடவுளே கச்சபா லயனே! 99

சைவசித் தாந்த தேசிக உத்தமனே
சச்சிதானந்த மெய்ச் சுடரே
ஐவரும் ஒடுங்கி வாய்மொழி குழறி
அலமரு காலையில் விடைமேல்
மையுறும் விழியாள் அழகம்மை உடனே
வந்தெனை அஞ்சலென்று அருள்வாய்
கைவலோர் தவஞ்செய் காஞ்சியம் பதிவாழ்
கடவுளே கச்சபா லயனே! 100

வரமருள் கச்சப ஈசுவரர் தமது
மாலையை எழுதினோர் படித்தோர்
திரம்பெறக் கேட்டோர் அருச்சனை புரிவோர்
சிந்தையில் நினைப்பவர் புவியை
நிரந்தரம் புரப்பார் ஆயுள்செய் செல்வம்
நித்ய கல்யாணராய் முடிவில்
கரந்தை வார்சடிலக் கச்சபா லயர்தம்
கழலிணை நிழலில் வாழ்குபவரே! 101

ஸ்ரீ கச்சபேசுவரர் மாலை முற்றிற்று
திருச்சிற்றம்பலம்

நந்தவன மகிமை கூறிது

நந்தவனத்தில் ஈசன் நல்லுமை வினாயகர்
சுந்தராதித்தர் ஆதிக்கடவுளர் முனிவர் சித்தர்
அந்தமில் கணங்கள் ஆதிஆன தேவதைகள் எல்லா
எந்தநாளும் சேர்ந்தாங்கே எளிதினில் இருந்துவாழ்வர்.

உ

சிவமயம்

காஞ்சிப் புராணம்

கச்சபேசப் படலம்

ஓடரிக் கண்ணியார் ஆடலும் பாடலும் ஓவுறாச்
சேடமை இட்டசித் தீசமேன் மைஇது செப்பினாம்
ஆடமைத் தோளிஓர் பாகர்வாழ் அன்னதன் தென்புடைத்து(து) 1
ஓடவிழ் சோலைசூழ் கச்சபே சத்தியல் சொல்லுவாம்.

ஐவகைப் பூதம்மால் அயன்முத லாயபல் சராசரம்
எவ்வகை உள்ளவும் ஈறுசெய்(து) இமயமா மயிலொடும்
அவ்விர(வு) ஆட்டயர்ந்(து) அங்கவை மீளவும் ஆக்குவான் 2
தெவ்வடு குறுநகைச் சிற்பரன் திருவுளம் செய்தனன்.

வரமருள் கச்சப ஈசுவரர் தமது
மாலையை எழுதினோர் படித்தோர்
திரம்பெறக் கேட்டோர் அருச்சனை புரிவோர்
சிந்தையில் நினைப்பவர் புவியை
நிரந்தரம் புரப்பார் ஆயுள்செய் செல்வம்
நித்ய கல்யாணராய் முடிவில்
கரந்தை வார்சடிலக் கச்சபா லயர்தம்
கழலிணை நிழலில் வாழ்குபவரே! 101

ஸ்ரீ கச்சபேசுவரர் மாலை முற்றிற்று
திருச்சிற்றம்பலம்

நந்தவன மகிமை கூறிது

நந்தவனத்தில் ஈசன் நல்லுமை வினாயகர்
சுந்தராதித்தர் ஆதிக்கடவுளர் முனிவர் சித்தர்
அந்தமில் கணங்கள் ஆதிஆன தேவதைகள் எல்லா
எந்தநாளும் சேர்ந்தாங்கே எளிதினில் இருந்துவாழ்வர்.

உ
சிவமயம்
காஞ்சிப் புராணம்

கச்சபேசப் படலம்

ஓடரிக் கண்ணியார் ஆடலும் பாடலும் ஓவுறாச்
சேடமை இட்டசித் தீசமேன் மைஇது செப்பினாம்
ஆடமைத் தோளிஓர் பாகர்வாழ் அன்னதன் தென்புடைத்(து)
ஓடவிழ் சோலைசூழ் கச்சபே சத்தியல் சொல்லுவாம். 1

ஐவகைப் பூதம்மால் அயன்முத லாயபல் சராசரம்
எவ்வகை உள்ளவும் ஈறுசெய்(து) இமயமா மயிலொடும்
அவ்விர(வு) ஆட்டயர்ந்(து) அங்கவை மீளவும் ஆக்குவான்
தெவ்வடு குறுநகைச் சிற்பரன் திருவுளம் செய்தனன். 2

உலகெலாம் அழிவுறுங் காலையும் தன்னுடைக் காவலில்
குலவுசீர்க் காஞ்சியில் சோதிலிங் கத்(து) உருக்கொண்டு எழுந்து
இலகுதன் சத்தியால் முன்புபோல் யாவையும் நல்கினான்
அலகிலா நாமரூப ங்களும் ஆக்கினான் அண்ணலே. 3

போற்றுசீர் அவ்விலிங் கத்தினைப் போற்றினோர் யாவரும்
மாற்றரும் வீடுபே(று) எய்துவர் நான்முகன் வாணியோ(டு)
ஆற்றலான் ஆயிடை மாதவம் ஆற்றிஅவ் அங்கணன்
ஊற்றமார் அருளினால் படைத்திடும் தலைமைபெற்(று) ஓங்கினான். 4

முன்னொரு பிரமகற் பத்திடை நாரணன் மூரிநீர்
மன்னுமந் தரமலை ஆமையாய்த் தாங்கிவார் கடல்கடைந்(து)
இன்னமு தம்சுரர்க்(கு) ஈந்தபின் வெஞ்செருக்(கு) எய்திஆங்(கு).
கன்னமுந் நீர்முழு(து) உழக்கினான் உல(கு)எலாம் அஞ்சவே. 5

அச்சம்நீத்(து) ஆருயிர் உய்வகை அருள்சுரந்(து) ஆங்குஉறீஇக்
கச்சபத்(து) இன்னுயிர் செற்(று) அதன் ஓட்டினைக் கதுமென
நச்சிய வெண் தலை மாலிகை நடு(வு) உறக்கொண்டனன்
பச்சிளங் கிள்ளைபால் வீற்றிருந்(து) அருளிய பண்ணவன். 6

இப்பெரும் பிழைதவிர்ந்(து) உய்யுமா நாரணன் எம்பிரான்
வைப்பெனும் காஞ்சியில் சோதிலிங் கத்தினை வழிபடூஉ
மெய்ப்படும் அன்பினால் இரந்(து) இரந்(து) ஏத்தலும் விடைமிசைத்
துப்புறழ் செஞ்சடைத் தோன்றல் அங்(கு) அவன்எதிர் தோன்றினான். 7

காண்டலும் கண்கள் நீர் வார்தரக் கரையறு காதலின்
பூண்டபேர் அன்பினால் வீழ்ந்(து) வீழ்ந்(து) இறைஞ்சினன் போற்றி
ஆண்தகாய் ஆருயிர் தலைவனே அங்கணா அடியனேன்
வேண்டுவ யாவையும் தந்(து) அருள்என்(று) எதிர்வேண்டினான். 8

மழுவலான் இணையடிப் பொதுவறு பத்தியும் மால்பதத்(து)
அழிவிலா இறைமையும் அவ்விலிங் கம்தனக்(கு) அன்றுதொட்(டு)
ஒழிவரும் கச்சபே சத்திரு நாமமும் உம்பரார்
தொழு(து) எழஆங்கு அரன் உமையோடும் இனி(து) அமர் தோற்றமும் 9

அத்தலந் திகழ்அவி முத்தமாம் தலத்தினும் அதிகமா
வைத்திடும் தலைமையும் வரம்எனக் கொண்டனன் வள்ளலும்
சித்தம்நீடு உவகையின் அங்கவை முழுவதும் தேத்துழாய்ப்
பத்தனுக்(கு) அருள்புரிந்து ஆயிடை மறைந்தனன் பரையொடும். 10

அன்றுதொட்(டு) என்றும் அக்காஞ்சியின் நீங்கலா(து) அமர்ந்திடும்
கொன்றைவார் சடையனைக் கச்சபே சன்தனைக் கும்பிடச்
சென்றவர் கண்டவர் கருதினர் யாவரும் தீது தீர்ந்(து)
ஒன்றிஒன் றாநிலை மாறிலா முத்திபெற்று ய்வரே. 11

துர்க்கையும் சாத்தனும் இரவியும் வயிரவத் தோன்றலும்
நற்கரி முகனுடன் ஐவரும் கச்சப நாயகன்
பொற்கம லப்பதம் பூசனை ஆற்றிஅங்(கு) உடன்அமர்ந்(து)
ஒற்கமில் கணங்களோ(டு) அப்புரிக் காவல்பூண்(டு) உறுவரால். 12

அந்தணீர் கச்சபே சக்குட வைப்பினில் ஆயிதழ்க்
கந்தமா மலர்மிசைச் செல்விதன் கணவனார் போற்றிசெய்(து)
உய்ந்தசத் தியமொழி விநாயகன் உளன்அவற் போற்றினார்
எந்தஊறுந் தவிர்ந்(து) இம்மையே வேட்டவை எய்துவார். 13

// கச்சபேசப்படலம் முற்றிற்று //

உ

சிவமயம்

காஞ்சிப் புராணம்

இஷ்டசித்தீசப் படலம்

திகழ்அரி சாபம் தீர்த்த திருநகர் முதல்வானாடர்
புகழ்அயி ராவ தீசப் பொன்மதில் வரைப்பீ றாக
நிகழ்தரு தளிகள் சொற்றாம் நிறைஅயி ராவதேசத்
திகழ்தருந் தென்சார் இட்ட சித்தீசத்(து) உண்மை சொல்வாம். 1

தொழுதகு பெருமை சான்ற சுக்கிரன் அங்கண் எய்திக்
கெழுதகு பூசை ஆற்றிக் கிடைத்தனன் சித்தி எல்லாம்
முழுதருள் பெற்ற அன்னோன் மொழிவழித் தசீசி எய்தி
வழிபடு முறையின் ஏத்தி வச்சிர யாக்கை பெற்றான். 2

உதீசிமா நாகங் கோட்டி முப்புரம் ஒறுத்த அயிரா
வதீசனுக் கணிய தென்பால் வைகிய உணர்வுக் கெட்டா
அதீதனை வழுத்தி அந்நாள் வச்சிர யாக்கை பெற்ற
ததீசியின் செயல்விரித்துச் சாற்றுவன் முனிவீர் கேண்மின். 3

பிருகுவின் மரபில் தோன்றும் பிறங்குசீர்த் ததீசி மேலோன்
அருவிமா மதமால் யானைக் குபன்எனும் அரசன் தன்னோடு
ஒருவருங் கேண்மை எய்தி அளவளாய் உறையுங் காலை
இருவரும் ஒருநாள் கூடி நகுபொழு(து) இனைய சொல்வார். 4

விப்பிரர் கொல்லோ அன்றி வேந்தரோ பெரியர் என்னும்
அப்பொழு(து) அந்தணாளர் அரசரில் சிறந்ததோர் என்னச்
செப்பினன் ததீசி மன்னன் மன்னரே சிறந்தோர் என்றான்
இப்பரி(சு) இருவருக்கும் எழுந்தது வயிரப் பூசல். 5

அழலென முனிவன் சீறி அடித்தனன் அடித்தலொடும்
மழலைவண்டு இமிரும் தாரான் வச்சிரம் சுழற்றி வீசிப்
பழமறை முனிவன் யாக்கை இருதுணி படுப்ப அன்னோன்
கிழமைகூர் வெள்ளி தன்னை நினைந்துகீழ் நிலத்து வீழந்தான். 6

சுக்கிரன் உணர்ந்து போந்து துணியுடல் பொருத்திக் கூட்டி
அக்கணத்(து) எழுப்பித் தேற்றி அறைகுவான் முனிவ கேண்மோ
நக்கலர் கமல வாவிக் காஞ்சியின் நணுகி அன்பர்ன்
முக்கணற் றொழுதி யாண்டுங் கொலையுறா முதன்மை கோடி. 7

இழைமணி மாடக் காஞ்சி இட்டசித் தீச வைப்பின்
மழைதவழ் மிடற்றுப் புத்தேள் மலரடி வழுத்திப் பெற்றேன்
விழைதகு மிருதசஞ்சீ வினிஇது அதன்தென் பாங்கர்த்
தழைபுகழ் இட்டசித்தி தரும்புனல் தடம்ஒன் றுண்டால். 8

அத்தடம் படிந்தோர் தம்பால் ஆரருள் சுரக்கும் ஈசன்
பத்தியால் அதனைக் கண்டோர் தீண்டினோர் பருக லுற்றோர்
புத்தியோ(டு) ஆடப் பெற்றோர் அறம்பொருள் இன்பம் வீடாம்
சித்திகள் பெறுவார் என்றால் அதன்புகழ் செப்பற் பாற்றோ. 9

மல்லல் நீர்அரி வாரம் மூழ்கிடின் மகவி லான்மக(வு) ஈன்றிடும்
இல்லம் இல்லவன் மனைவி எய்துவான் ஆயுள்இல்லவன் அஃதுறும்
கல்வி இல்லவன் கல்வி எய்துவான் கண்ணி லான்விழி பெறுகுவன்
செல்வம் இல்லவன் செல்வம் மேவுவன் அரசிலான் அரசு செய்யுமால். 10

அலகை பூதம தாதிபற்றி அலைக்க நின்றவர் இரவிநாள்
குலவு அத்தடம் ஆடின் அங்கவை கோடி யோசனை பின்னிடும்
கலிகெ முந்துயர் குட்ட வெம்பிணி முயல கன்பெரு நோயெலாம்
விலகி நீங்கும் அந்நீர் படிந்திடும் அக்கணத்தித மெய்மையே. 11

காதளாவிய குழைகி ழித்துவி டங்க னிந்து குமிழ்ம்மிசை
மோது மையரி வாள் தடங்கண் முகிழ்ந்த கொங்கை நுணங்கிடை
மாத ராயினும் மைந்த ராயினும் வந்து பூம்புனல் ஆடினோர்
யாதுயாது விரும்பி னாலும்அவ் விட்டசித்தி அளிக்குமால். 12

முந்து கந்தனில் வாணி தன்னோடு முளரி மெல்லணை நான்முகன்
வந்து மேதகும் இட்ட சித்தி மலர்த் தடந்தனில் ஆடிநன்(று)
உந்து சத்திய லோக வாழ்க்கை படைத்திடுந் தொழிலோடுற
இந்து சேகரன் அருள் கிடைத்தனன் எறுழ்வ லித்தவ முனிவனே. 13

ஏயும் நல்திரே தாயுகத்தின்என் றூழ் படிந்து மறைத்தனு
ஆயிரங்கதிர் ஆண்டு தன்தினத்(து) அத்தடம்படிந் தோர்க்(கு)அரன்
மேய சித்திகள் விரைவின் நல்கவும் விருச்சி கத்தின் அந் நாளுறின்
வாயும் அப்பயன் மிகவி ரைந்து வழங்க வும்வரம் எய்தினான். 14

துவாப ரத்(து)அரி பூவின் மாதொடு தோன்றி அத்தடம் ஆடினான்
தவாது பல்லுயிர் காக்கும் வாழ்வொடு மால்பதந்தனைப் பெற்றனன்
உவாம திக்கலை ஆன னாம்பிகை கலியுகத்தில் அந் நீர்படிந்(து)
அவா நிறைந் தருள் கம்ப நாயகர் பாதிமேனி அடைந்தனள். 15

இவர்கள் நால்வரும் நான்(கு) உகங்களுக்(கு) இறைவராயினர் மற்றும்
சிவமு றும்புனல் ஆடிமுன்தின கரன்இ ழந்தபல் எய்தினான் (இசி)
தவள மாமதி முயல கப்பிணி சாடினன் பகன் என்பவன்

துவளு மா(று) உயர் வீர பத்திரன் தொட்ட வாள்விழி பெற்றனன். 16

வடதி சைக்கிறை வரைம டக்கொடி வடிவுநோக்கி இழந்தகண்
உடன் அரற்கொரு நட்பும் எய்தினன் ஓதுச்சரு மேளனும்
உடல்கணைக்கரு விழி உருப்பசி யுகள கொங்கை மணந்தனன்
மிடல்கொள் கண்ணன் அளித்த சாம்பனுங்குட்ட வெம்பிணி நீக்கினான். 17

நிடதம் மன்னிய நளன்அ யோத்தி இராமன் நீள்புகழ்ப் பாண்டவர்
மடனில் இங்கிவர் முத்தி றந்தரும் மருவலாரை அழித்து வென்று
இடன்இழந்திடும் இறைமை எய்தினர் இரியும் ஐம்புலவாழ்க்கையோய்
தடவு மென்மலர் இட்டசித்தி தரும்த டம்படி போற்றினால். 18

தோற்றமார் வடாது வெந்நோய் துமித்திடும் தரும தீர்த்தம்
போற்றரும் குணாது விண்ணோர் புகழ்தரும் அருத்த தீர்த்தம்
கூற்றறுந் தெனாது மாறாக் குரைபுனல் காமதீர்த்தம்
சாற்றிய குடாது முத்தித் தீர்த்தம்அத் தடத்துள் ஓங்கும். 19

நாற்பயன் உதவுந்தீர்த்தம் நான்(கு) உடை இனைய தீர்த்தம்
ஏற்புறத் திங்கள் தோறும் சிறந்ததே எனினும் சால
மேம்படும் இடபம் கும்பம் விருச்சிகம் கடகம் தன்னில்
பாற்படும் சேர்க்க அவற்றின் மேலாம் கார்த்திகைப் பானுவாரம். 20

பானுநாள் விடியற் போதின் அத்தடம் படிந்தோர் யாவர்
ஏனும்அங்(கு) அவர்கள் எய்தும் பே(று) எவர் இயம்பற் பாலார்
தானம் நீராடல் ஓமம் கணித்தல் அத்தடவுக் கஞ்சத்
தேனலர் இட்ட சித்தி தீர்த்தத்(து) ஒன்(று) அனந்தம் ஆமால். 21

ஆதலின் அங்கண் மூழ்கி அருங்கொலை உறாத மேன்மை
தீதறப் பெறு(கு) என்(று) ஓதி மிருத சஞ்சீவி னிப்பேர்
மேதகு மனுவும் நல்கிச் சுக்கிரன் விடுப்பப் போந்து
கோதிலா முனிவன் ஓகை கூர்ந்து காஞ்சியினைச் சேர்ந்தான். 22

சேர்ந்தவன் இட்டசித்தி தீர்த்த நீர்ப் படிந்து கண்ணீர்
வார்ந்திட இட்டசித்தி வரதனை அர்ச்சித்(து) அன்பு
கூர்ந்தனன் சின்னாள் பின்னர்க் குழப்பிறை மோலி தோன்றி
ஈந்தனன் வயிர யாக்கை இனிவருங் கொலைஎய் தாமே. 23

அவ்வகை வரங்கள் எல்லாம் அண்ணல்பால் பெற்று மீண்டு
மெய்வகைத் ததீசி எய்தி வேத்தவை வேந்தன் சென்னி
எவ்வமில் இடத்தாள் ஓச்சி உதைத்தனன் இவனுக்(கு) என்று
தெவ்வெனச் சமரின் ஏற்ற மாயனைச் செயித்து வென்றான். 24

இடனுடை புரிசை சுற்றும் இட்டசித்(து)ஈச வைப்பில்
குடதிசை முகமா வைகும் குழகனை வழிபட்(டு) இன்னும்
நடலைதீர்ந்து இட்ட சித்தி நண்ணினர் எண்ணிலாதார்
புடவியில் அதன்தன் நீர்மை யாவரே புகலும் நீரார். 25

"இட்டசித்திப்படலம் முற்றிற்று"

"சிவமயம்"

அணி இலக்கணத்துள் கச்சபேசம்

நீல மணி மிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூல் அணிந்த மார்பன் நுதல்விழியன்-தோல்உடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க்(கு) இறை.

பொருள் : கருங்குவளை போன்ற அழகிய கழுத்தையும் முடியில் நீண்டிருக்கின்ற சடையினையும், மார்பில் முப்புரி நூலினையும், நெற்றியில் கண்ணினையும், உடையாக தோலினையும், கைகளில் மானினையும், மழுவினையும் உடையனாய் திருக்கச்சாலையில் வீற்றிருந்து எம்மை ஆட்கொண்ட பெரியோன் தேவர்களுக்குத் தலைவனாவான்.

குறிப்பு : இச்செய்யுள் பொருள் தன்மை அணிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால் சென்(று) அகன்ற
காலத்தால் ஆராத காதலால் - ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாம்
கச்சிக்கச் சாலைக் கனி

பொருள் : காஞ்சியில் திருக்கச்சாலைத் திருக்கோவிலில் வீற்றிருக்கும் கனிபோன்ற பெருமான் ஒழுக்கத்தாலும், அறிவாலும் மனத் தெளிவாலும், இறைவனிடத்தில் செலுத்திய காலத்தின் பெருமையாலும் ஒப்பில்லாத ஆசையாலும் உயர்ந்தவர் விரும்பிக் கொண்டிருக்கவும் அடியேனுக்கு மிகவும் சிறந்து இனிதாக நிற்கிறான்.

குறிப்பு : இச்செய்யுள் நீரோட்டம் (இதழ் குவிக்கும் உயிரும் மெய்யும் இல்லாமல் பாடப்படுவது) என்னும் சொல்லணிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தண்டி என்னும் வடமொழிக் கலைஞரால் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு, கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழில் பெயர்த்து எழுதப்பட்ட தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூலினுள் தன்மை அணிபற்றி கூறும்போது கச்சபேசத்துத் தன்மை கூறப்படுகிறது.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த

(கச்சபேசர் ஆலயத்தில்)

கச்சித்தலத் திருப்புகழ்

மக்கட்குக் கூறரி தானது
கற்றெட்டத் தான்முடி யாதது மனதாலே
மற்றொப்புக் கியாதுமொ வாதது
மட்டிட்டுத் தேடவொ ணாதது
தத்துவத்திற் கோவை படாதது
மத்தப்பொற் போதுப கீரதி மதிசூடும்
முக்கட்பொற் பாளகு சாவிய
அர்த்தக்குப் போதக மானது
முத்திக்குக் காரண மானது பெறலாகா
முட்டர்க்கெட் டாதது நான்மறை
யெட்டிற்றெட் டாதது வேவரு
முற்பட்டப் பாலையி லாவது புரிவாய்
செக்கட்சக் ராயுத மாதுலன்
மெச்சப்புற் போதுப டாவிய
திக்குப் பொற் பூதர மேமுதல் வெகுரூபம்
சிட்டித்துப் பூதப சாசுகள்
கைக்கொட்டிட் டாடமகோததி
செற்றுச்ரச் சூரனை மார்பக முதுசோரி
கக்கக்கைத் தாமரை வேல்விடு
செச்சைக்கர்ப் பூரபு யாசல
கச்சுற்றப் பாரப யோதர முலையாள்முன்
கற்புத்தப் பாதுல கேழையு
மொக்கப்பெற் றாள்விளை யாடிய
கச்சிக்கச் சாலையில் மேவிய பெருமாளே.

அ/மி.ஆனந்தருத்திரேசர் ஆலயம், காஞ்சிபுரம், பிள்ளையார்பாளையம், சேர்மென் சாமிநாத முதலியார் தெருவில் அமைந்துள்ளது.

மாதவச் சிவஞான முனிவர் அருளிய

கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்

திருச்சிற்றம்பலம்

ஐந்தை ஆறினை அடக்கி அருந்தவம் புரியா ரேனும்
வந்(து) ஐயா எனஎல் லோரும் வணங்கிட வாழ லாமால்
முந்(து) ஐஆ(று) இரண்டு தன்மம் முதல்விசெய் மூதூர்வாழும்
எந்தை ஆனந்த ருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே. 1

குடங்களில் பணைத்(து) அணாந்த கொங்கைமால் களிறு அல்குல்
படங்களுங் கொடுமின்னார்செய் பருவரல் பாற்ற லாமால்
மடங்களாந்(து) அறிவால்மிக்க மாதவர் மனம்போல் காஞ்சி
இடங்கொள் ஆனந்தருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே. 2

வருந்தலா(து) எண்எண்கல்வி வாய்க்கும்எண் செல்வப்பேறு
பொருந்தவா உகங்கள் நூறும் புகழுடன் பொலிய லாமால்
திருந்தவால் வளையும் முத்தும் செய்தொறும் செறிதென் காஞ்சி
இருந்தஆனந்த ருத்தி ரேசனை இறைஞ்சி னோர்க்கே. 3

பொறைதவம் அறி(வு) ஒழுக்கம் புத்திர மித்தி ராதி
குறைவறு செல்வம் யாவுங் குலவவீற் றிருக்க லாமால்
மறையொலி முரசந் துஞ்சா வளநகர்க் காஞ்சி வாழும்
இறைவன் ஆனந்த ருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே. 4

ஆசைவேர் அகழ்ந்து வெண்ணீ(று) அஞ்செழுத்(து) அக்கமாலை
பூசிஉச் சரித்துப் பூண்டபுனி தரோ(டு) இணங்க லாமால்
யோசனை கமழ்(உ)ய்யானம் உடுத்திடும் காஞ்சியூர் வாழ்
ஈசன் ஆனந்த ருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே. 5

பானந்தம் கையில் ஏந்தும் பைந்துழாய் மார்பன் முன்னரம்
வானந்தங்(கு) அமரா யாரும் வணங்க வாழ்ந்திருக்க லாமால்
கானம்தண் பொழிலில் ஆறு கால்செயும் கச்சிமூதூர்
ஆனந்த ருத்தி ரேசன் அடித்துணை இறைஞ்சி னோர்க்கே. 6

கங்கணான்(கு) உள்ளான் முன்னும் கருமமும் காரான் ஊர்தி
செங்கயைார் பாசம் தன்னால் சிமிழ்த்தலும் தீரலாமால்
அங்களால் உயர்ந்த காஞ்சி அகநகர் அமர்ந்து வாழும்
எங்கள் ஆனந்த ருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே. 7

விழிகளால் மாதர் நாளும் விளைந்திடும் வேட்கையாய
குழிகள் ஆடுற்று வீழும் கொடுந்துயர் குமைக்க லாமால்
வழிகளார் சோலை சூழ்ந்த மாமதில் கச்சிவாழும்
எழில்கொள் ஆனந்த ருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே 8

இருக்கெலாம் அளவிட்(டு) இன்னும் இனைத்தென அறியவொட்டாத்
திருக்குலா வியபே ரின்பச் செழுங்கடல் திளைக்க லாமால்
மருக்கலார் அங்கண் மொய்த்த வாவிசூழ் காஞ்சி வாழ்(வு)உற்று
இருக்கும் ஆனந்த ருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே. 9

மாந்தளிர் இயலார் செம்பொன் மண்எனும் ஆர்வ வாரி
நீந்திமே லானமுத்தி நீள்கரை ஏறலாமால்
காந்துபொன் மாடம் சூழ்ந்த கச்சியம் பதிவாழ் கங்கை
ஏந்தும்ஆனந்த ருத்திரேசனை இறைஞ்சி னோர்க்கே. 10

ஆனந்த மலைபோலோங்கும் அம்பலத்(து) உமையாள் தங்கை
ஆனந்த மகிழ்ச்சி பூப்ப ஆனந்த அமிழ்தம் ஊறி
ஆனந்த நிருத்தம் செய்யும் அங்கணன் கச்சி மூதூர்
ஆனந்த ருத்திரேசன் அடியிணைக்(கு) அன்பு செய்வோம். 11

கச்சி ஆனந்தருத்திரேசகர் பதிகம் முற்றிற்று.

உ
சிவமயம்

அருள்மிகு சுந்தராம்பிகை உடனுறை கச்சபேஸ்வரர் ஆலயம் பள்ளியறை பூஜை விழா சங்கம்

(பதிவு எண் : 143/2005)

எண் : 71, புதுப்பாளையம் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் - 631 501.

நிர்வாகக் குழுவினர் & செயற்குழு உறுப்பினர்கள்



E.காளத்தி
தலைவர்
செல் : 9245452003



S.பரமசிவம் B.Com.,
செயலாளர்
செல் : 9940784369



R.ரவி
பொருளாளர்
செல் : 9994830229



R.அருள்நேசன்
துணைத்தலைவர்
செல் : 9445229579



G.தணிகைவேல்
துணைச் செயலாளர்
செல் : 8754222895



R.வீரராகவ முதலியார்
செயற்குழு உறுப்பினர்
செல் : 9994939850



C.ராமலிங்கம்
செயற்குழு உறுப்பினர்
செல் : 9442215617



D.ஆறுமுகம்
செயற்குழு உறுப்பினர்
செல் : 9443483739



E.கணேசன்
செயற்குழு உறுப்பினர்
செல் : 9843716743

[illegible]



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]

புரவலர்கள்



S.தனிகைவேல்
செல்: 9159878839



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]



E.ராஜி
([illegible])
செல்: [illegible]



S.திருஞானசம்பந்தன்
செல்: 8695996674



E.ராஜி
செல்: 9944139309



S.சிவக்குமார்
செல்: 9943727740



[illegible]
செல்: [illegible]



[illegible]
செல்: [illegible]

குடமுழுக்கு விழா படங்கள்



